விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 06 திங்கட்கிழமை (19.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

## ஒரு மாத காலத்திற்குள் ஏ-9 மக்கள் பாவனைக்கு

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கும் கண்டிக்கும் இடையிலான ஏ-9 வீதி ஒரு மாதத்துக்குள் பொது மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்படும் என அரசாங்கத்தரப்பில் கூறப்படுகிறது.

அரசாங்கப் படைகள் அண்மையில் ஆனையிறவைக் கைப்பற்றியதன் மூலம் ஏ-9 வீதி முழுவதும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதால் அவை முடிபுற்ற பின்னர் மக்களின் பாவனைக்காக ஏ-9 வீதி திறந்துவிடப்படும் என (14ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் இருந்து தப்பிச் சென்ற சிவ்சங்கர் மேனன்

(சென்னை)

இலங்கையில் நடைபெறும் போரை தடுத்து நிறுத்துவதற்கு மத்திய அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி உட்பட அனைத்துக் கட்சியினரும் குரல் எழுப்பி வருகின்றனர்.

இதையடுத்து பேச்சுவார்த்தைக்காக பிரதமர் மன்மோகன்சிங், இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் சிவ்சங்கர் மேனனை இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

அவர் கடந்த 15 ஆம் திகதி இரவு டெல்லியில் இருந்து நேரடியாக கொழும்பு புறப்பட்டு சென்றார். அங்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் (14ஆம் பக்கம் பார்க்க)

# உடனடியாக யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வு காண வேண்டும்

## சிவ்சங்கர் மேனன் ஜனாதிபதி மகிந்தவிடம் வலியுறுத்தியதாக இந்தியா தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை அரசு உடனடியாக யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டுமென இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் வலியுறுத்தியதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் முழுமையாகத் தோற்பதை இந்தியா ஒருபோதும் விரும்பாது

### ஜே.வி.பி.கருத்து

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என தெரிவிக்கும் இந்தியா மறுபுறம் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களான தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை டில்லிக்கு வரவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளமை இந்தியாவின் இரட்டை வேடத்தை வெளிப்படுத்தியுள்ளதென்று ஜே.வி.பி.குற்றம் சாட்டியுள்ளது.

விடுதலைப்புலிகள் முழுமையாக தோல்வியடைவதையும் எமது நாடு பயங்கரவாதத்தை முழுமையாக வெற்றிபெறுவதையும் இந்தியா ஒருபோதும் விரும்பாது என்றும் அக்கட்சி (14ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு நோக்கி 50 ஆயிரம் படையினர்

# நாளொன்றுக்கு 15 புலிகளை கொல்வதற்குத் திட்டம்

### லக்பிம வார ஏடு தகவல்

(கொழும்பு)

முல்லைத்தீவு நோக்கிய தாக்குதலுக்கு 8 டிவிசன்கள் கொண்ட 50 ஆயிரம் படையினர் தயாராகி வருகின்றனர்.

அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை 500 சதுர கிலோ மீற்றர் பரப்பள[illegible]வு ஒரு பெட்டிவடிவில் சுற்றிவளைத்துள்ளனர் எனக் கொழும்பில் இருந்து வெளிவரும் லக்பிம ஆங்கில வார ஏடு தனது பாதுகாப்பு பத்தியில் தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறுதிக் கட்ட நடவடிக்கை ஏற்கனவே தொடங்கிவிட்டது. படையினரின் முன்னணி நிலைகளை (14ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.பிராந்திய தளபதிகள் பிள்ளையானுடன் சந்திப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் பிள்ளையானை (சந்திரகாந்தன்) அமெரிக்கா அரசாங்கத்தின் பசுபிக் பிராந்திய கட்டளைப் பீட அதிகாரிகள் மேஜர் ஜெனரல் தோமஸ் எல் கொனற் தலைமையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த 16ஆம் திகதி மாலை நடைபெற்ற இச் சந்திப்பில் தென்னாசிய பிராந்தியத்திற்கான பணிப்பாளர் லெப்.ஜெனரல் சி.பிற்றிகுறு இலங்கைக்கான அமெரிக்க தூதரக பாதுகாப்புத் துறை அதிகாரி (14ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு தென்பகுதி படையினர் வசமானது

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பின் தென் பகுதியை இராணுவத்தின் 59-வது படைப்பிரிவு கைப்பற்றியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பகுதியில் விடுதலைப் புலிகளின் படகு கட்டும் இடங்களும் முன்னணி முகாம்களும் காணப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## விசுவமடுவில் எறிகணைத் தாக்குதல் இரு குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் பலி

### பி.பி.சி. தகவல்; இராணுவப் பேச்சாளர் மறுப்பு

(கொழும்பு)

விசுவமடுப் பகுதியில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பலியாகியிருப்பதாகவும் 10க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் 10 பேர் பலியானதுடன் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பகுதியில் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 4 பேர் பலியாகியதாகவும் தெரியவருகிறது.


இச்சம்பவத்தில் காயமடைந்த 3 சிறுவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டு (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யப்பானின் விசேட தூதுவர் அகாசி 21 ஆம் திகதி இலங்கை வருகிறார்

## தமிழ்க் கூட்டமைப்பையும் சந்திக்க விருப்பம் தெரிவிப்பு

எதிர்வரும் புதன்கிழமை இலங்கை வரவிருக்கும் இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் மற்றும் இடம்



பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்துவார் என எதிர்பார்க் கப்படுகிறது.

ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் மூன்று நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 21ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இலங்கை வரும் அவர், கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் களைச் சந்திப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாக கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எனினும் இலங்கை வரும் அகாசி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் விநாயகமூர்த்தி முரளீதரனைச் சந்திப்பாரா இல்லையா என்பது பற்றி ஜப்பானியத் தூதரகம் உறுதியாக எந்தத் தகவல்களையும் தெரிவிக்கவில்லை.

அதேநேரம் தமிழ் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை யசூசி அகாசி சந்திப்பதற்கு ஆர்வமாக இருப்பதாக ஜப்பானியத் தூதரகம் கூட்டமைப்புக்கு அறிவித்துள்ளது.

இலங்கை வரும் அகாசி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து இலங்கையின் பிந்திய நிலைவரங்கள் குறித்துக் கலந்துரை யாடல்களை நடத்துவார் என எதிர்பார்க் கப்படுகிறது.

இதேவேளை இரண்டு நாட்கள் உத்தி யோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன் நேற்றுக் காலை நாடு திரும்பினார். (ந-5)

## உயர்தரப் பாடத் தெரிவு கருத்தரங்கு நாளை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (உ/த) பாடத்தெரிவு சம்பந்தமான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில், சகல 1 ஏபி, 1 சி பாடசாலை அதிபர்களையும் க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் க.பொ.த உயர்தர வகுப்புக்கள் நடாத்தும் தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளையும் வலயக் கல்விப்பணிப்பாளர்களையும் விஞ்ஞான கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் களையும் கல்வி அபிவிருத்தி கல்வி முகாமைத் துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம் கேட்டுக்கொண்டுள்ளார். (ந-14)

## அநுராதபுரம் சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல்

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நேற்று முற்பகல் அதிகாரிகளினால் தாக்கு தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது குறித்து தெரிய வருவதாவது; நேற்று முன்தினம் அதிகாலை இந்த சிறைச்சாலை யில் இருந்து மூன்று கைதிகள் தப்பியோடினர். பின்னர் அவர்கள் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்தே அரசியல் கைதிகள் தாக்கப்பட்டு அவர்களின் உடைமைகளும் தீயிடப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்துள்ளார்.

தப்பியோடிய கைதிகள் வேறு பிரிவிலும் அரசியல் கைதிகள் வேறு பிரிவிலும் வைக்கப் பட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் எவ்வித காரணங்களும் இன்றிதாம் தாக்கப்பட்டுள்ளதாக அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் சிறைச்சாலைகள் ஆணையாளர் வஜிர விஜய குணவர்த்தனவை தொடர்பு கொண்டு கேட்டபோது நேற்று தப்பிச் சென்ற கைதிகள் தொடர்பில் விசாரணை செய்யவேண்டும் என சிறைச்சாலை அதி காரிக்ள் கேட்டதற்கு அரசியல் கைதிகள் இணங்கவில்லை என்றும் இந்நிலையிலேயே சிறிய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள் ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## அரசியல் தலைவர்கள் வற்புறுத்தல் உண்ணாவிரதத்தை நேற்று கைவிட்டார் திருமாவளவன்

### பெப்.4 இல் தமிழகம் முழுவதும் எதிர்ப்பு



இலங்கையில் உடன் போரை நிறுத்தி அப் பாவித் தமிழர்களை காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி உண்ணாவிரதம் இருந்த விடுதலை சிறுத் தைகள் கட்சித்தலைவர் தொல். திருமாவ ளவன் பல்வேறு அரசியல் தலைவர்களின் வற்புறுத்தலினால் உண்ணாவிரதத்தை நான்காவது நாளுடன் நேற்று முறித்துக் கொண்டார்.

அவரது உடல் நலன் கருதி தமிழக முதல்வர் கருணாநிதி, பா.ம.க நிறுவனர் ராமதாஸ், ஆற்காடு வீராசாமி, தா. பாண் டியன், என். வரதராஜன் உட்பட பல்வேறு அரசியல் தலைவர்கள் உண்ணாவிரதத்தை கைவிடும்படி வலியுறுத்தினர்.

திருமாவளவனின் தாயார் பெரியம்மாவும் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கேட்டுக் கொண்டார்.

நேற்றுக் காலை விடுதலை சிறுத்தைகள் கட்சி அரசியல் நிர்வாக குழு கூட்டம் உண்ணா விரதப் பந்தல் அருகே நடந்தது. இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்ட முடிபில் உண்ணாவிரதத்தை கைவிடுவதாக இல்லை என்று முடிபெடுத்தார் திருமாவளவன்.

இந்நிலையில் நேற்று மாலை பா.ம.க நிறுவனர் ராமதாஸ், ஈழ போராட்டத்திற்கு உண்ணாவிரதம் சரியல்ல; வேறு வகையில் போரா டுவோம் என்று சமாதானப்படுத்தி பழச்சாறு கொடு த்து உண்ணா விரதத்தை முடித்து வைத்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் சுதந்திரதினம் பெப்ரவரி 4ஆம் திகதி தமிழகம் முழுவதும் இலங்கை தேசியக் கொடியை எரிக்கப் போவதாக விடுதலை சிறுத்தைகள் கட்சி அறிவித்துள்ளது.

பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க உண்ணாவிரதத் தை கைவிட்ட திருமாவளவன் இலங்கை அரசு மீது தமிழகத்தின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் விதமாக பெப்ரவரி நான்காம் திகதி இலங்கை சுதந்திர கொடி எரிப்பு போராட்டம் தமிழகம் முழுவதும் நடைபெறும் என்று தெரிவித்தார். (ந-5)


## அன்பார்ந்த பாடசாலை அதிபர்களே!

2008 க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் 3A மற்றும் 2AB பெற்ற சகல மாணவர்களையும் இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து பாராட்டி கௌரவிக்கவுள்ளது.

உங்கள் பாடசாலையில் 3A, 2AB பெற்ற மாணவர்களினது பெயர் விபரங்களையும் அவர்களின் புகைப்படங்களையும் உறுதிப்படுத்தி,

"உயர்தர மாணவர் கௌரவிப்பு-2008"
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

*குறிப்பு:*
**தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சைப் பெறுபேற்றின் பிரதியுடன் புகைப்படத்தையும் வலம்புரி அலுவலகத்தில் நேரில் ஒப்படைத்து தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளவும்.**

நன்றி

BOC
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

வலம்புரி,
யாழ்ப்பாணம்.


## வன்னியில் இருந்து வருவோருக்கு வவுனியாவில் புதிய வீட்டுத்திட்டம்

### 900 ஏக்கரில் அமைக்க நடவடிக்கை

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனி யாவுக்கு வந்திருக்கும் மக்களுக்காக 900 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்படவிருப்பதாக வவுனியா அர சாங்க அதிபர் செயலகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

நேற்று முன்தினம் கொழும்பில் நடை பெற்ற விசேட பேச்சுவார்த்தையின் தொடர்ச் சியாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா அரசாங்க அதிபர் செயலகத்தில் கூட்ட மொன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தி லேயே புதிய வீட்டுத்திட்டங்களை அமைத்துக் கொடுப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் பகுதியில் 600 ஏக்கரிலும் ஓமந்தை மாணிக்க வளவு பகுதியில் 300 ஏக்கரிலும் நிரந்தர வீடுகள் அமைக்கப்படவிருப்பதாகவும் இது தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பிலி ருந்து விசேட குழுவொன்று வவுனியா வரவிருப் பதாகவும் வவுனியா அரசாங்க செயலக வட்டா ரங்கள் கூறுகின்றன.

மெனிக்பாம் பகுதியில் அமைக்கப்பட விருக்கும் வீட்டுத்திட்டங்கள் சகல வசதிகளைக் கொண்டதாகவும் 55 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய வகையில் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்கள் தங்கக்கூடிய விடுதிகள் அமைக்கப்பட விருப்பதாகவும் தெரிய வருகிறது. (ந-5)

## இன்று ஒரு தகவல்

# மதிப்பு குறையுமா?

ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஒரு பேச்சாளர் பேச ஆரம்பித்தார். அதற்கு முன் ஒரு நூறு ரூபாய் நோட்டை கையில் எடுத்தார்.

அதை உயர்த்திப் பிடித்துக் கொண்டே எல்லோரையும் பார்த்து ,"இந்த நூறு ரூபாய் நோட்டை விரும்புகிறவர்கள் யார்? என்றார். அவ்வளவுதான். அங்கிருந்து அனைவரும் கையை உயர்த்தினார்கள்.

பின்னர் அதை கசக்கிவிட்டு, "இந்த கசங்கிய நோட்டை விரும்புபவர்கள் யார்?"என்று கேட்டார்.

தூக்கிய கையை யாரும் இறக்கவில்லை. அப்படியே வைத்திருந்தார்கள்.

பேச்சாளர் பார்த்தார்.

அந்த நோட்டை மண்ணில் போட்டு தனது பூட்ஸ் காலால் மிதித்து தேய்த்தார். அது கசங்கி அழுக்காகி விட்டது.

இப்பொழுது அந்த கசங்கிய நோட்டை எடுத்து உயர்த்திப் பிடித்து,

"இப்பொழுது இந்த நோட்டை விரும்புபவர்கள் யார்?" என்று கேட்டார்.

தூக்கிய கையை யாருமே கீழே இறக்கவில்லை.

இப்பொழுது அந்தப் பேச்சாளர் ஆரம்பித்தார். அருமை நண்பர்களே! இப்பொழுது நீங்கள் எல்லோரும் ஒரு நல்ல பாடத்தை கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இந்த பணத்தை நான் கசக்கினேன்- காலில் போட்டு மிதித்தேன்.

அழகாக இருந்த நோட்டு அசிங்கமாகி விட்டது. இந்தப் பணத்தை நான் என்ன செய்தாலும் சரி... நீங்கள் தொடர்ந்து அதை விரும்புகிறீர்கள். என்ன காரணம்?

அது அதனுடைய மதிப்பில் குறையவில்லை. அப்பொழுதும் அதனுடைய மதிப்பு நூறு ரூபாய் தான். இப்பொழுதும் அதனுடைய மதிப்பு நூறுரூபாய் தான்.

நமது வாழ்க்கையிலும் நாம் எடுக்கும் முடிவுகள், ஏற்படும் சூழ் நிலைகள் இவற்றால் நாம் கசக்கப்படுகிறோம்-மிதிக்கப்படுகிறோம்-அழுக்காகி விடுகிறோம். அப்பொழுது நாம் என்ன நினைக்கிறோம்.

"நாம் எதற்கும் லாயக்கில்லை. நமக்கு மரியாதை இல்லை."என்று நினைக்கிறோம். ஆனால் உண்மை என்ன தெரியுமா?

ஏற்கனவே எது நடந்திருந்தாலும் இனி மேல் எது நடக்கப் போவதாக இருந்தாலும் நம் மதிப்பில் நாம் குறைந்து விடுவதில்லை. இன்னல் வரும் போது மதிப்பு குறைந்து விட்டதாக நினைத்து யாரும் மனமுடைந்து போய்விடாதீர்கள்.

நீங்கள் ஒரு தனித்தன்மை உள்ளவர். உங்களிடம் ஒரு தனித்துவம் உண்டு. அது மற்றவர்கள் யாரிடமும் இருக்காது. அதை மறந்து விடாதீர்கள்.

நாளைய எதிர்பார்ப்புகளை நேற்றைய ஏமாற்றங்கள் அமுக்குவதற்கு இடம் கொடாதீர்கள்.

Never Let Yesterdays Disappoinments Overshadow Tomorrows Dreams. மொத்தத்தில் வாழ்க்கையை சரியாக புரிந்து கொண்டோமானால் சங்கடமில்லை.

நமக்கு ஏற்படும் கஷ்டங்கள் நம்முடைய மதிப்பைக் குறைத்து விடுவதில்லை. என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு தெருவில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். பக்கத்தில் இன்னொருவர் நின்று கொண்டு அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இவர் அவரைக் கேட்டார்.

"ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்றார்.

"ம்... சும்மாதான் நிற்கிறேன்." என்றார் அவர்.

" பொய் சொல்லாதீர்கள். நான் பார்த்து விட்டேன் கீழே கிடந்த நூறு ரூபாய் நோட்டை மிதித்துக் கொண்டிருக்கிறீர்கள் அப்படி செய்யக்கூடாது. அது மிகவும் தவறு" என்றார். அவருக்கு கோபம் வந்து விட்டது.

" இவ்வளவு உரிமையாக எனக்குப் புத்தி சொல்கிறாயே... நீ என்ன எனக்குச் சொந்தக்காரனா?" என்றார்.

"இல்லை நான் அந்த நோட்டுக்கு சொந்தக்காரன்" என்றார் இவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புகைபிடிப்பதன் மூலம் வருடாந்தம் 20 ஆயிரம் பேர் வரை மரணிப்பு

## மதுவரித் திணைக்கள ஆணையாளர் தகவல்

நாடளாவிய ரீதியில் வருடாந்தம் புகைப்பிடிப்பதன் காரணமாக20 ஆயிரம் பேர் வரை மரணிப்பதாக மது வரி திணைக்கள ஆணையாளர் நாயகம் காலே பொன் சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி 1ஆம் திகதியில் இருந்து செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலானகாலப் பகுதியில் புகையிலைப்பாவனை மற்றும் மது பாவனை கணிசமான அளவு குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆம் ஆண்டில் மது வரி சட் டகளை மீறிய 11 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதாகவும் இவர்களிடம் இருந்து 1 கோடி 70இலட்சம் ரூபா நிதி தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை வயதில் குறைந்தவர்களுக்கும் புகையிலை தொடர்பான பொருட்கள் மற்றும் மது வகைகளை விற்பவர்களுக்கும் 4 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அல்லது ஒரு வருட சிறைத் தண்டைன விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# பாதுகாப்பான போக்குவரத்து பாதைக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிப்பு

(கொழும்பு)

வன்னி மோதல்களில் காயமடையும் மக்களை அழைத்து வருவதற்குப் பாதுகாப்பான போக்குவரத்து பாதையைஏற்படுத்திக் கொடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

வன்னியில்தொடரும் மோதல்களில் காயமடையும் மக்கள் மற்றும் இடம்பெயரும் மக்களைஅழைத்து வருவதற்குப் பாதுகாப்பான பயணப் பாதை இல்லையென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஐ.நா முகவர் நிலையங்களும் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் தாம் பாதுகாப்பான பயணப் பாதைக்கு உத்தரவாதமளிப்பதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து பாதுகாப்பு உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும்அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கட்டுப்பாடற்ற பகுதிகளி லிரு ந்து வெளியேறும் மக்கள் பாதுகாப்பாகவேஅரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அழைத்து வரப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கூறினார். இந்த விடயத்தில முன்னரங்கப் பகுதிகளிலுள்ள இராணுவத்தினர் தன்னார்வ நிறுவனங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தெரிவித்தார்.

பாதுகாப்பான போக்குவரத்துக்கு இராணுவத் தரப்பிலிருந்து எந்த விதமான தடையும் இல்லையெனத் தெரிவித்திருக்கும் இராணுவப் பேச்சாளர் விடுதலைப் புலிகளிடமிருந்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் பாதுகாப்பு உத்த ரவாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என கூறியுள்ளார். (6)

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக கடந்த வருடத்தில் ஆயிரத்து 232முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு பணியகத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு பணியகத்தின் தலைவர் ஜகத் வெள்ளவத்தை கருத்துத் தெரிவிக்கையில்,

எங்களிடம் 56 வீதமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று பதிவு செய்யப்பட்டுள்ளன.இவற்றில்728 முறைப்பாடுகள் சிறுவர் உரிமை மீறல் தொடர்பானவை ஆகும். ஏனைய 504 முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பானவை

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளில் அதிகமானவை மிக சிறு வயதினர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

2007 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்புப் பணியகத்தின் அறிக்கையின் படி கடந்த வருடம் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளது. இதற்கமைய 2007 ஆம் ஆண்டு 853 ஆக இருந்த முறைப்பாடுகள் 2008 ஆம் ஆண்டு 1232ஆக அதிகரித்துள்ளது எனவே சிறுவர்கள் உரிமை மீறல் , துஷ்பிரயோகம் என்பனபற்றிய தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் பொது மக்கள் தமக்கு தகவல் தர வேண்டும் எனவும் அவர்கேட்டுக்கொண்டுள்ளார். (6)

# அச்சம் காரணமாக இலங்கையிலிருந்து ஊடகவியலாளர்கள் வெளியேற்றம்

சிரச ஊடகம் தாக்கப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டமை ஆகிய சம்பவங்களைஅடுத்து நாட்டிலிருந்து அச்சம் காரணமாக ஊடகவியலாளர் வெளி நாடுகளுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா தீப சிங்கள ஊடகத்தின் அரசியல் ஆய்வாளர் உப்புல் ஜோசப் பெர்ணான்டோ , லங்கா தீப பாதுகாப்பு ஆய்வாளர் ரத்தின பால கமகே , சண்டே ரைம்ஸ் பாதுகாப்பு ஆய்வாளர் இக் பால் அத்தாஸ், அனுருத்த லொக்கு ஹப்பு ஆராச்சி மற்றும் ரொய்ட்ரறின் புகைப்பட செய்தியாளர் ஆகியோர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனனர்.

இதே வேளை எம்.டி.வி நிறுவனத்தின் ஊடகவியலாளர் செவான் டேனியல் நாட்டிலிருந்து வெளியேற திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.(6)

# புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலிருந்து வரும் பொதுமக்களுக்கு விசேட அடையாள அட்டைகள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டு பிரதேசத்திலிருந்து அரச கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வரும் பொது மக்களுக்கு விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன. சிவில் சமூகத்தில் தங்களது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி அன்றாட நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு துணையாக இந்த அடையாள அட்டை விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடையாள அட்டை விநியோகம் தொடர்பில்பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு வார்த்தைகள் நடை பெற்று வருவதாகவும் தற்போது வவுனியாவில் உள்ள இடைத் தங்கல் முகாம்களில் தஞ்சமடை ந்துள்ள குறித்த மக்கள் மீள் குடிய மர்த்தப்படும்வரையில் இந்த அடையாள அட்டைகளை பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

## இராசி பலன்

19.01.2009
(தை6, திங்கட்கிழமை)
சுவாதி முன்னிரவு 7.19 மணிவரை
நவமி பின்னிரவு 2.46மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை
சுபநேரம்-12.35-2.05 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், தெய்வநம்பிக்கை, கீர்த்தி, அபூர்வ சந்திப்பு. |
| இடபம் | சத்துருஜெயம், முயற்சிகை கூடும், உற்சாகம், ஆரோக்கிய நிலை. |
| மிதுனம் | மரியாதைக்குறைவு, வேலைச் சுமை, பணக்குறைவு, வியாபார நன்மை |
| கடகம் | புதிய முயற்சி, மனச் சஞ்சலம், சுபசெலவு, கல்வியில் ஆர்வம். |
| சிங்கம் | சகோதரர் உதவி, அதிகாரம், கூட்டு முயற்சி, பொருள் சேர்க்கை. |
| கன்னி | பணவிரயம், காரிய தாமதம், வேலைச்சுமை, விவாதம். |
| துலாம் | தன்னம்பிக்கை, போசனசுகம், புதியமுயற்சி, உறவினர் சந் திப்பு. |
| விருச்சிகம் | சுபசெலவு, உறவினர் மனஸ் தாபம், இட மாற்றம், காரிய தாமதம். |
| தனுசு | எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி, குடும்ப மகிழ்ச்சி, விருந்துபசாரம். |
| மகரம் | கடின முயற்சி, தூரதேசச் செய்தி, தேக நலன், அதிகாரம். |
| கும்பம் | பிரயாணம், பிதா சிந்தை, புதிய திட்டமிடல், ஆரோக்கியக் குறைவு. |
| மீனம் | எதிரிகள் தொல்லை, காரிய தடங்கல், போசனசுகம், அப கீர்த்தி. |

வளவன்

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி வாகீசன் சாந்தினி தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். தேசியக் கல்வியிற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், சிறப்பு விருந்தினராக நிக்கொட் நிறுவன பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-134)

## தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டிகள் தற்பொழுது அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து நியூகிற் விளையாட்டுக் கழகமும், நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து நியூஒற்றுமை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (6)

# கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட பால்மா வகைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு கப்பல்மூலம் எடுத்து வரப்பட்ட அங்கர், லக்ஸ் பிறே முழு ஆடைப் பால்மா வகைகள் நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் கையிருப்பில் உள்ளதாகவும் தேவையான ப.நோ.கூ. சங்கங்கங்கள் இவற்றிற்கான வழங்கற் கட்டளைகளை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று பால்மாவினை களஞ்சியத்திலிருந்து பெற்று பொது மக்களுக்கு விநியோகிக்குமாறும் மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

அத்துடன் 400 கிராம் அங்கர் பைக்கற் ஒன்றின் ப.நோ.கூ.சங்க விற்பனை விலை 280 ரூபா எனவும் 400 கிராம் லக்ஸ்பிறே பைக்கற் ஒன்றின் விலை 252 ரூபா எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சிவப்பு நாட்டரிசி கோதுமை, பருப்பு ஆகியனவும் போதியளவு கையிருப்பில் உள்ளதாகவும் இவற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் ப.நோ.கூ.சங்கங்கள் உடனடியாக அவற்றிற்கான வழங்கற் கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வழங்கற் கட்டளைகள் பெற்று களஞ்சியத்திலிருந்து பொருட்களை பெற்றுக் கொள்ளாத ப.நோ.கூ.சங்கங்கள் அவற்றினையும் உடனடியாக களஞ்சியங்களிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## க.பொ.த.(உயர் தர) பரீட்சை பெறுபேறுகள்

**கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்**
**கலைப்பிரிவு**

A, 2B -ப.கிருபாதயன், உ.கௌசிகா
A,B,C - வ.சசிரேகா
A, 2C- பா.சுகிதா, ப.சிந்துஜா
A,C,S - இ.கிரிசாந், ம.றஜீவன் த.நிரோஜா


## திக்கம் வடிசாலை தரம் உயர்த்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திக்கம் வடிசாலையின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு, வடிசாலை தரமுயர்த்தப்படும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத் திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

திக்கம் வடிசாலை ஊழியர்கள் அமைச்சரை அவரது யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திக்கம் வடிசாலையை நிரந்தரமாக வடமராட்சி பனை,தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் கையளிப்பது தொடர்பில் தனக்கு ஆட்சேபனைகள் கிடையாது என்பதை எடுத்துக் கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திக்கம் வடிசாலையானது முன்னேற்றம் காண வேண்டுமே அன்றி பின்னடைவு காணக் கூடாது என வலியுறுத்திக் கூறியதுடன் மேற்படி வடிசாலையை மேம்படுத்தி, அது சார்ந்த தொழிற்துறைகளை விருத்தி செய்து, தொழில் வாய்ப்புக்களை மேலும் அதிகரிக்க இயலும் என்றும் கூறினார். (ந)



அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலய திருவாசக முற்றோதல் நிகழ்வு ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சிவகுமார குருக்கள் தலைமையில் நடைபெறுவதைப் படத்தில் காணலாம்.

# இடம்பெயர்ந்து வரும் மக்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் யாழ் வரும் யாழ்.மாவட்ட மக்களை வெகு விரைவில் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தி, அம் மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த நிலையில் தற்போது யாழ்.வந்திருக்கும் மக்கள் தற்காலிகமாகத் தங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வரும் மக்கள் தொகைக்கேற்ப தங்குமிட ஏற்பாடுகள் விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ள அமைச்சர் இம் மக்களது அடிப்படைத் தேவைகள் குறித்து தொடர்ந்து அவதானித்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளதுடன் வெகு விரைவில் இம் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளைத் தான் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி மக்களின் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக, உதவ முன்வரக் கூடிய சர்வதேச மற்றும் உள்நாட்டு தொண்டர் நிறுவனங்களுடனும், வர்த்தக மற்றும் ஏனைய தரப்பினருடனும் கலந்துரையாடப்பட்டு விபரங்கள் திரட்டப்பட்டு வரும் நிலையில் கூடிய விரைவில் இம் மக்களுக்கான இயல்பு வாழ்க்கை உருவாக்கிக் கொடுக்கப்படும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (6)

## அப்பியாசப் புத்தகங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சீயோன் தேவாலயத்தினரால் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான அப்பியாசப் புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளன.

இந் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபா கு.கதிர்காமசேகரர் தலைமையில் நடைபெறவுள்ளது.பிரதம விருந்தினராக யாழ்.சீயோன் தேவாலய நிறைவேற்று அதிகாரி போதகர் வண. யோகனன் டேவிஸ் பிலிப்பு, சிறப்பு விருந்தினர்களாக உதவிப் போதகர் வண ஜக்சன் சூசைப்பிள்ளை, மீசாலை கிளைச் சபை போதகர் வண மகாராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-29)

## கட்டாக்காலிகளின் தொல்லையால் மரக்கறிச்செய்கையாளர்கள் பாதிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் கட்டாக் காலிகளின் தொல்லையால் மரக்கறிச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்போரால் கட்டிவைக்காமல் அவிழ்த்துவிடப்படும் கால்நடைகள் தோட்டங்களுக்குள் நுழைந்து பயிர்களை நாசம் செய்வதாகவும் இதனால் மரக்கறிப் பயிர்ச்செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

நிஷா சூறாவளியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மரக்கறிச் செய்கையாளர்கள் மீண்டும் கட்டாக்காலிகளின் தொல்லைகளால் பாதிக்கப்பட்டு வருவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. (6-72)

## யாழ்.செய்திகள்

## விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தால் 2009/2011 கல்வியாண்டுக்கான கல்விமாணிப் பட்டக் கற்கைநெறிக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

அத்துடன் பாடநெறி விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தின் மாதிரிகளையும் வலயக் கல்வி அலுவலகங்களில் பார்வையிட முடியும் எனவும் இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (6)



அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட உழவர் விழாவில் இடம்பெற்ற கைக்கொடி மாட்டுச்சவாரி, வட்டு மத்திய கல்லூரிக்கும் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையேயான வலைப்பந்தாட்டம் மற்றும் கயிறு இழுத்தல் நிகழ்வுகளை படங்களில் காணலாம். (படங்கள்:கோபி)

# தமிழக முதல்வர் நினைத்தால் பிரச்சினையை எளிதாக தீர்க்கலாம்

## பா.ஜ.க. தேசிய செயலாளர்

(காஞ்சிபுரம்)

தமிழக முதல்வர் கருணாநிதி நினைத்தால் இலங்கைப் பிரச்சினையை எளிதாக தீர்க்கலாம் என பா.ஜ.க. தேசிய செயலர் சு.திருநாவுக்கரசர் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி மறைமலை நகரில் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள திருமாவளவனுக்கு பா.ஜ.க தலைவர்கள் இல.கணேசன் சு.திருநாவுக்கரசர் ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர்.

அப்போது திருநாவுக்கரசர் பேசியதாவது,

இலங்கைப் பிரச்சினைக்காக தமிழக அரசியல் கட்சிகள் பிரதமரை சந்திக்கச் சென்றாலோ அல்லது எதிர்க்கட்சி தலைவர்களைச் சந்திக்கச் சென்றாலோ பா.ஜ.கவும் இணைந்து செல்லும் தி.மு.க தலைவர் மீது எங்களுக்கு இன்னும் நம்பிக்கை உள்ளது. முதல்வர் நினைத்தால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

ஆட்சி போனால் போகட்டும் என மத்திய அரசுக்கு நிபந்தனை வைத்தால் சிறுபான்மையாக உள்ள திமுக அரசு பெரும்பான்மை பெறும் இல்லையென்றால் சிறுபான்மை அந்தஸ்தும் போய்விடும் எதுதேவை என்பதை அவர் தான் முடிவு செய்ய வேண்டும்.

தமிழகத்தில் உள்ள கட்சிகளைக் கண்டு பயப்படாமல் மன்மோகன் அரசு இலங்கைக்கு உதவி செய்து வருகிறது. ஓர் இனம் அழிந்து வருகிறது. இப்பிரச்சினையில் அனைவரும் ஒன்று திரண்டு உள்ளோம்.

இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு



தூங்கிக் கொண்டிருந்தால் எதிர்காலத்தில் பெரும்விளைவைச் சந்திக்க நேரிடும் என்றார் திருநாவுக்கரசர். (6)

## இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு நேரடியாகத் தலையிடவேண்டும் இல. கணேசன்



(சென்னை) இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அதன் முடிவுகள் அமுல் படுத்தப் படுவதை இந்திய அரசு கண்காணிக்க வேண்டும் என்றும் தமிழக பாஜக தலைவர் இல.கணே சன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் லட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள் எனவே, இதனை அந் நாட்டின் உள் நாட்டு பிரச்சினையாகக் கருதாமல் இந்திய அரசு இதில் நேரடியாகத் தலையிட வேண்டும் . இந்த சண்டையின் மூலம் பிரபாகரனைப் பிடிக்க முடியாது. ஆகையால் இரு தரப்பினரும் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முயல வேண்டும் என்றார். (6)

## இலங்கைப் பிரச்சினைக்காக ஓரணியில் திரளுமாறு வைகோ,கம்யூனிஸ்ட்களுக்கு திருமாவளவன் அழைப்பு

(காஞ்சிபுரம்)

இலங்கைப் பிரச்சினைக்காக வைகோவும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் அரசியல் ரீதியில் ஒன்றுதிரள வேண்டும் என தொல் . திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக் கோரி , மறைமலைநகரில் கால வரையற்ற உண்ணா விரதம் மேற் கொண்டுள்ள அவர் சனிக்கிழமை பேசியதாவது,

இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர அனைவரும் ஒன்று பட்டால் தான் முடியும் . மத்திய அரசை இனி நம்பிப்பயனில்லை.

தமிழர்களின் நலனைக் கெடுக்க சில சக்திகள் முயன்று வருகின்றன.அவற்றை அடையாளம் காண வேண்டி உள்ளது. இப் பிரச்சினையில் ஒத்த கருத்துடையவர்கள் அரசியல் ரீதியாக பிரிந்து செயல்பட்டு வருகிறோம். தேர்தலுக்காக அணிகள்மாறி உள்ளோம்.

ஆனால் இன நலனுக்காக நாம் அனைவரும் ஒன்று சேர வேண்டும் . இதில் எந்த சுயலாபமும் இல்லை. வைகோ, ராமதாஸ் , தா.பாண்டியன் உட்பட அனைவரும் ஒன்றிணைய வேண்டும். முதல்வர் கருணாநிதிக்கு ஆதரவு தர வேண்டும்.

இந்த ஒற்றுமை தேர்தலுக்காகவும் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் அனைவரும் எதிர் பார்க்கும் நல்ல முடிவை எட்ட முடியும்.

உண்ணாவிரதத்தை கைவிடுவது குறித்து ஞாயிற்றுக்கிழமை நடக்கவுள்ள எங்கள் கட்சியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் செய்யப்படும் என்றார் திருமாவளவன். (6)

## உண்ணாவிரதத்தை திருமாவளவன் கைவிட வேண்டும் என்.வரதராஜன் கோரிக்கை

(சென்னை)

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் மேற்கொண்டு வரும் உண்ணாவிரதத்தை அவர் கைவிட வேண்டும் என்று என். வரதராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநில செயலாளர் என் வரதரா ஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்திய அரசு தரப்பிலிருந்து இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படுவதற்கான உடனடி முயற்சிகள் மேற் கொள்ளப்பட ஏதுவாக அங்கு இரு தரப்பிலும் உத்தரவாதமான இராணுவ மோதல்கள் நிறுத்தம் மேற்கொள்ளப்பட தனது ராஜாங்க ரீதியிலான தலையீட்டையும் வலியுறுத்தலையும் முனைப்பாக மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் வலியுறுத்துகிறது.

தற்போது மத்திய அரசின் வெளியுறவுத்துறை செயலாளர் இலங்கை சென்று மேற்கொண்டு உள்ள பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக மந்திரிகள் மட்ட தலையீடு மேற்கொள்ளப்படுவதும் அவசிய அவசரமாகிறது.

இந்தத் தருணத்தில் உண்ணாவிரதத்தை தொடரும்திருமாவளவனின்உடல்நிலைகுறித்து உள்ளார்ந்த கவலையும் அக்கறையும் கொண்டுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சியின் தமிழ் நாடு மாநில செயற்குழு அவர் தனது உண்ணாவிரதத்தை இந்த அளவோடு முடித்துக்கொள்ள வேண்டும் என்று அன்பான வேண்டுகோள் விடுக்கிறது. (6)



கிராம நன்மைக்காக விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் அருகே உள்ள பள்ளிப் புதுப் பட்டு கிராமத்தில் சிறுமிக்கும் தவளைக்கும் வினோத திருமணம் நடந்தது.

பழங்காலத்தில் இக் கிராமத்தில் கொலரா நோய் பரவிய போது சிவன் தவளை உருவும் அம்மன் சிறுமி உருவெடுத்து அவர்களுக்கு திருமணம் நடத்தினால் கொலரா நோய் குணமடையும் என பெரியவர்கள் கூறியதைத் தொடர்ந்து தவளைக்கும் சிறுமிக்கும் இந்த வினோத திருமணம் நடந்தது

## இலங்கைக்கு துடுப்பாட்ட அணியை அனுப்புவதை தடைசெய்ய வேண்டும்

### தமிழ்நாடு சட்டவாளர் சங்கம் கோரிக்கை

(சென்னை)

இந்திய அணி இலங்கை செல்வதற்கு அனுமதி மறுக்காதது துரதிஸ்ட வசமானது என தமிழ்நாடு சட்டவாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு சட்டவாளர் சங்கத் தலைவர் எஸ்.பிரபாகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் ஏராளமான தமிழர்கள் கொன்று குவிக்கப்படும் இந்த சூழ்நிலையில் இந்திய துடுப்பாட்ட சபையின் பண ஆதாயத்துக்காக இந்திய அணி இலங்கை சென்று விளையாடுவது தேவையற்றது.

மும்பாயில் நடைபெற்ற தீவிரவாதத்தால் பாகிஸ்தானுக்கு இந்திய துடுப்பாட்ட அணி செல்லாது என்று அறிவித்தது போல் அதற்கு சமமான இனப்படுகொலையை எதிர்த்து இலங்கைக்கும் இந்திய அணி செல்வதை தடுக்க வேண்டும்.இந்திய அணியின் இலங்கை பயணத்தை உடனடியாக மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும்.

தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்கு பதிலாக துடுப்பாட்ட விளையாட்டை இந்திய துடுப்பாட்ட சபை நடத்த முன்வந்தது தவறு. காயத்தில் உப்பைப் போட்டு தேய்ப்பதற்கு சமமான காரியம் இது.

தமிழர்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல் இலாபத்தை கணக்கில் கொள்ளும் இந்திய துடுப்பாட் ட சபையின் முடிவு உலகெங்கும் உள்ள தமிழர்களின் கண்டனத்துக்கும் வருத்தத்துக்கும் உரியது.

அங்கு சமாதானம் நிலவினால் இந்திய அணி சென்று துடுப்பாட்ட போட்டிகளில் கலந்து கொள்ளட்டும் .

எனவே இலங்கைக்கு துடுப்பாட்ட அணியை அனுப்புவதையோ அங்கு செல்லும் அணியை தேர்வு செய்து அறிவிப்பதையோ தடை செய்ய வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## ஈழ மக்கள் நிவாரணத்தை மட்டுமே எதிர்பார்க்கும் பிச்சைக்காரர்களா?

## சிவாஜிலிங்கம் எம்.பி ஆவேசம்

(சென்னை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி சிவாஜிலிங்கம் ஈழத் தமிழர்களுக்காக உண்ணா விரதம் இருந்து வரும் திருமாவளவன் பற்றி தனது கருத்தை தெரிவித்துள்ளார். இலங்கை தமிழர்களுக்குத் துரோகம் செய்யும் இந்திய அரசையும் கண்டித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர்,


திருமாவளவனின் உடல் நிலை கருதி அவர் உண்ணா விரதத்தை கை விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமாவளவனின் நலம் ஈழத் தமிழர்களுக்கு முக்கியம் அவர்கள் அவர் மீது அவ்வளவு மதிப்பும் , மரியாதையும வைத்திருக்கிறார்கள். என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஓரிரு நாட்களில் தமிழ் ஈழத்தில் இருந்து தலைவர்கள் வருவார்கள். அவர்களும் உண்ணாளவிரதத்தை கைவிடுமாறு வலியுறுத்துவார்கள் .திருமாவளவன் அவர்கள து அந்தக் கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும்.

ஈழப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மத்திய, மாநில அரசைப் பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. அதுவும் இந்திய மத்திய அரசைப் பற்றி நான் எதுவும் பேச விரும்பவில்லை.அப்படி பேசினால் கொடூரமான பேச்சாக இருக்கும் அதனால் நான் பேச விரும்பவில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை வெளியுறவு அமைச்சருடன்இந்திய வெளியுறவு அமைச்சர் சிவ் சங்கர் மேனன் பேசுகையில், இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய அரசு ஒரு கோடியே எழுபது இலட்சம் நிவாரண நிதி வழங்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.




ஈழமக்கள் நிவாரணத்தை மட்டும் எதிர் பார்த்து நிற்கும் பிச்சைக் காரர்களா என்ன.

சென்னை சங்கமம் நிகழ்ச்சிக்காக முதல்வர் கருணாநிதி தன் பணத்தில் ஒரு கோடி கொடுக்கிறார். அப்படியிருக்க ஒரு இந்திய அரசு வெறும் ஒரு கோடி எழுபது இலட்சம் கொடுப்பதாக சொல்லியிருப்பதை என்ன வென்று சொல்வது என்று தெரிவித்துள்ளார். (6)

# சுனாமி வீடமைப்புத் தி...

கெருடாவில் கொலனி (48வீடுகள்) கெருடாவி...

அல்வாய் வட மத்தி (23 வீடுகள்) அல்வா...

## சர்வதேச லயன்ஸ் கழகத்தின் முன்...

## அமரசூரிய அவர்களால் 200...

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



பேரன்புடையீர்!

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் வீடுகளை அமைத்து அவற்றை வழங்கும் இன்றைய நாளில் அந்த அமைப்பினரைப் பாராட்டுவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதையே எல்லாச் சமயங்களும் போதிக்கின்றன. இன்றைய வாழ்க்கையில் நாம் பிறருக்கு உதவி செய்வதன் மூலமே பேரின்பத்தைப் பெறுகின்றோம். அவ்வகையில் லயன்ஸ் கழகத்தினரின் பணி வரலாற்றில் என்றும் போற்றப்படும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதன் மூலம் அவர்களை ஆற்றுப்படுத்தும் இந்தக் கழகத்தின் அரும் பணியை இறைவன் நிச்சயம் ஆசீர்வதிப்பார். இப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**

நல்லை ஆதீனம் நல்லூர். **ஆதீன முதல்வர்.**

### சுவாமி சித்ரூபானந்தாவின் ஆசிச் செய்தி



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சமாசத்தால் 136 வீடுகள் கொண்ட நான்கு திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு திறப்பு விழா நடைபெறுகிறது.

இந்த வீட்டுத்திட்டங்கள் சுனாமி வீடமைப்பு (வடக்கு)திட்டக் குழு கட்டு விப்பதற்கு எடுத்துள்ள முயற்சி பாராட்டுதற்குரியது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்யும் சேவை இறைவனை சென்றடையும் என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்தாகும். யாவும் சிறப்புற எங்கள் நல்வாழ்த்துக்கள்.

**இறைபணியில் அன்புள்ள**
**சுவாமி சித்ரூபானந்தா.**

### ஆயரின் ஆசிச் செய்தி



ஆழிப்பேரலையால் அவதியுற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பது ஒரு புண்ணிய கைங்கரியம் ஆகும். இந்த வகையில் சர்வதேச லயன்ஸ் கழகம் இன்று அல்வாய் வடமேற்கிலும், மத்தியிலும், கெருடாவில் கொலனியிலும், மண்டபக்காட்டிலும் 136 வீடுகளை அமைத்து சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கையளிப்பது பற்றியும் மேலும் 316 வீடுகளை அமைத்துக்கொண்டும் எதிர்காலத்தில் அமைக்கவும் உள்ளது பற்றியும் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். வீடுகளை அமைத்துக் கொடுப்பது போலவே இந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதும் விரும்பத்தக்கது. அப்போது தான் இந்தக் குடும்பங்களுக்கு முழுமையான உதவி கிடைக்கும்.

பொருட்தட்டுப்பாடு, அதீத விலையேற்றம். போக்குவரத்துக் கஸ்டங்கள் தொடர்பான பிரச்சினைகளின் மத்தியில் இந்தப்பெரு முயற்சியை சுனாமி வீடமைப்பு (வடக்கு) குழுவின் தலைவர், உறுப்பினர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களின் இந்த முயற்சி வெற்றிபெற எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகளை இறைஞ்சுகிறேன்.

**வண. பிதா D.S.தியாகராஜா**

### LCIF ...

2004இல் ... அதுவரை ஏற்... அழிவு ஏற்பட்ட... இந்த அனர்த்த... பட்ட வர்களுக்கு... வழங்குவதில் ... கள் முன்னணி... வீடிழந்தவர்க... களைக் கட்டிக்... முன்னணி வகி...

இலங்கைக்கு... வீடமைப்புக்காக... முதல் கட்டமாக ... பிக்கப்பட்டு இப்... பட்டுள்ளது மகி...

முன்னாள் ... மீள்கட்டமைப்பு ... லயன் சக். விஜே... பினர் களுக்கும் ... வடக்கிற்கு இட்டுச்... வருவதற்கு கா... ஸில் தலைவர் ல... பாராட் டுக்கள் உ...

**லயன் ...**
**MJF லயன்...**
**நேர்முந்தை...**
**LCIF இ...**

### சுனாமி மீள் கட்டமைப்பு புனர் நிர்மாணத் திட்டத்தின்(TRRC)நன்கொடை நிர்வாகியின் செய்தி



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சமாசத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை கையளிக்கும் வைபவத்தின் போது இந்தச் செய்தியை அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல கஷ்டங்களுக்கு மத்தியில் இதற்கான பணத்தை ஒதுக்கியது திருப்தியை அளிக்கிறது. முதல் கட்டமாக இன்று கையளிக்கப்படும் 136 வீடுகளுக்கு மேலதிகமாக 113 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. எல்லாமாக 444 வீடுகளை கட்ட உத்தேசிக்கிறோம். இன்று திட்டங்களை திறந்து வைப்பதற்கு எனது வேண்டுகோளை ஏற்ற முன்னாள் சர்வதேச தலைவரும் தற்போதைய LCIF தலைவருமான லயன் மகேந்திர அமரசூரிய MJF அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்த வீடுகளை பூர்த்தி செய்வதற்காக லயன் க.துரைராஜாவின் தலைமையிலான சுனாமி வீடமைப்பு (வடக்கு) குழுவினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

**முன்னாள் பல்மாவட்ட கவுன்சில்**
**தலைவர் லயன் எஸ். சிவானந்தன் MJF**

### சுனாமி மீள் கட்டமைப்பு புனர் நிர்மாணத் திட்டம் (TRRC)

*தலைவர் : முன்னாள் சர்வதேச பனிப்பாளர் சக் விஜேநாதன் MJF*
*நன்கொடை நிர்வாகி: முன்னாள் பல்மாவட்ட தலைவர் லயன் எஸ்.சிவானந்தன் MJF*
*திட்ட இணைப்பாளர்: முன்னாள் பல் மாவட்டத் தலைவர் லயன் உப்பாலி சமரசிங்க MJF*
*பல் மாவட்ட சபைபொருளாளர்: மாவட்ட ஆளுநர் லயன் பி.ஜெயராஜன் MJF*
*முன்னாள் சர்வதேச பணிப்பாளர்: லயன் அசோக்க De.z குணசேகர MJF*
*பல் மாவட்டச் சபைத் தலைவர்: மகேஸ்பஸ்குவல் MJF*

### வரவேற்புக்குழுத் தலைவரின் செய்தி



சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நிதி யளிப்புப் பிரிவின் நிதிப் பங்களிப்பின் பய னாக யாழ். மாவட்டத்தில் இன்று இரு பாரிய பயன்தரு திட்டங்களான சுனாமி வீடமைப்புத் திட்டமும் யாழ். போதனா வைத்தியசாலை யின் அவசர சிகிச்சை அலகின் நவீன உபகரண வசதியுடனான சிகிச்சை பிரிவுத் திட்டமும் பூர்த்தியடைந்துள்ள நிலையில் வைபவ ரீதியாகத் திறப்பு விழா செய்யப் படவிருப்பது லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் அனைவருக்கும் மிகுந்த மனமகிழ்வைத்தருகின்றது.

இவ்விரு நிகழ்விலும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நிதியளிப்புப் பிரிவின் தற்போதைய தலைவரும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் முன்னாள் சர்வதேச தலைவரும் கொமர்ஷல் வங்கியின் தலைவருமான லயன் மகேந்திர அமரசூரிய MJF அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வீடுகளைக் கையளிக்கின்றார். இந் நிகழ்வுக ளினை லயன்ஸ் கழகங்களின் பல்மாவட்டம் -306 சுனாமி மீள் கட்டமைப்பு புனர் நிர்மாணத் திட்டத்தின்(TRRC) சார்பாக ஒருங்கிணைந்து செயற்படுத்தும் வரவேற்புக் குழுவின் தலைவராக செய லாற்றும் பணியினை செவ்வனே நிறைவேற்ற எல்லாம் வல்ல ஆண்டவன் ஆசீர்வதிப்பாராக. யாழ். மாவட்டத்தின் மேம்பாட்டிற்கு லயன்ஸ் கழகங்களின் பங்களிப்பின் தன்மையை இந்த இரு திட்டங்களின் பயன்பாடும் பெறுமதியும் விளக்கும். இன்று கையளிக்கப்படும் 136 வீடுகளுக்கும் நிர்மாணிக்கப்படும் மிகுதி வீடுகளுக்கும் ஒதுக்கப்பட்ட நிதியின் பெறுமதி ரூபா22.6 கோடியாகும். நவீன வசதிகளுடனான அவசர சிகிச்சை அலகின் உபகரணங்களுக்கான பெறுமதி ரூபா 8 கோடியாகும். சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் பயனை பாதிக்கப்பட்ட மக்கள் அனுபவிக்க வழி சமைத்த பல் மாவட்டம்-306 சுனாமி மீள் கட்டமைப்பு புனர் நிர்மாணத் திட் (TRRC) அங் கத்தவர்கள் அனைவருக்கும் சுனாமி வீடமைப் புத் திட் (வடக்கு)குழு அங்கத்தவர்கள் அனைவருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் யாழ். மண்ணிலே இத் திட்டம் நிறைவேற அயராது உழைத்து வரும் நன்கொடை நிர்வாகி லயன் எஸ். சிவானந்தன் MJFஅவர்களுக்கும் சுனாமி வீடமைப்புத்திட்ட (வடக்கு )குழுத் தலைவர் லயன் கே. துரைராஜா அவர்களிற்கும் இத் தருணத்திலே பாராட்டுக்களை தெரிவிப்பதிலே மனமகிழ்வடைகிறேன். யாழ். போதனாவைத்தியசாலை அவசர சிகிச்சை அலகுத் திட்டத்தை உருவாக்கியவர் சென்ற வருட ஆளுநர் லயன் எஸ். இராகவன் MJF ஆவர். அவர்களிற்கு யாழ். வாழ் மக்கள் சார்பிலும் லயன்ஸ் கழகங்களின் அங்கத்தவர்கள்சார்பிலும் எமது நன்றிகள் உரித் தாகட் டும்.மேலும் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் தற்போதைய ஆளுனர் லயன் நிமல்ராஜபக்ஷ MJF அவர்களும் யாழ். மக்களுக்கான பாரிய நல்ல சேவைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகிறேன். இன்றைய நிகழ்வுகளின் பிரதம விருந்தினர் கொமர்ஷல் வங்கியின் தலைவர் ஆகவும் கௌரவ விருந்தினர் கொமர்ஷல் வங்கியின் ஏற்றுமதிப் பிரிவின் தலைவர் லயன் எஸ். ராகவன் MJF ஆகவும் கொமர்ஷல் வங்கியின் யாழ். கிளையின் சிரேஸ்ட முகாமையாளராகிய நான் வரவேற்புக் குழுவின் தலைவராகவும் அமைவது பொருத்தமானதே. வரவேற்புக் குழுவின் அங்கத்தவர்களுக்கும் மற்றும் உப குழுக்களின் இணைப்பாளர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் உதவி ஒத்தாசை புரிந்து துணை நின்ற சகலருக்கும் எனது நன்றியினைத் தெரிவிக்கிறேன்.

**S.இரவீந்திரா மாவட்ட இணைப்பாளர்,**
**சர்வதேச லயன்ஸ் கழகம் (மாவட்டம் 306 B1)தலைவர் வரவேற்பாளர்**



*"லயன்ஸ் கழகத்தினர் எமக்கு அழகான வீட்டை அமைத்துத் தந்துள்... தெற்கு வாழ்வாதார முன்னேற்றச் சங்கம் என்ற அமைப்பையும் ஏற்ப... எம்மால் முடிகிறது"*

**தலைவர்:** எஸ்.ரவீந்திரா, மாவட்ட இணைப்பாளர் இணைத்...
**நிர்வாகக்குழு:** லயன் எஸ்.எஸ்.தங்கராஜா பிரதி கபினட் ... கே.துரைராஜா, மாவட்ட இணைப்பாளர், லயன் ரி.சற்குணராஜா M... கே.எம்.பத்மநாதன் MJF, மாவட்ட இணைப்பாளர். லயன் ஸ்தீபன் ... பிராந்தியத் தலைவர். லயன் வி.சுந்தரேஸ்வரன் MJFமாவட்டத் தலைவர். ... லயன் எம்.சோமசுந்தரம் மாவட்டத் தலைவர். லயன் எஸ்.தவச்செல்வன் ...

### யாழ்ப்பாணத்தில்...

**லயன் மு. துரைராஜா, மாவட்ட இணைப்பாளரும் சுனாமி வீடமைப்பு...**

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நிதி அளிப்புப் பிரிவு(LCIF) 2004ஆம் ஆண்டு... களை புனரமைப்பதற்காக பெரும் தொகைப்பணத்தை ஒதுக்கிக்கொடுத்தது. இவ்வ... ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையில்... கட்டமைப்பு புனர் நிர்மாணத்திட்டம்(TRRC) என்ற அமைப்பை ஏற்படுத்தி ஒவ்வொன்...

இந்த வீடுகளுள் 200 வீடுகள் மாத்திரமே ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டன. பின்னர் ... 444ஆக உயர்ந்தது. இந்த நான்கு திட்டங்களும் உலக வங்கித் திட்டங்களாக ஆர... முறைப்படுத்துவதற்கு ஆரம்ப கர்த்தாவான யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. க... உதவி வருகின்றனர். கொழும்பில் இருந்த வண்ணம் எமக்கு பல உதவிகளைச் செய்து ... மாவட்ட ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷ MJF, லயன் எஸ். சிவானந்தன் MJF, செ...

# இலங்கையில் தமிழர் 44

## ஆதி இரும்புக் காலம்

### மிக முற்பட்ட ஆவணங்கள்

எழுதப்பட்ட ஆவணங்கள் இல்லாது, எழுத்தறிவு பெறுமுன் இருந்த சமூகங்களின் மொழி பற்றித் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வழி எதுவும் இல்லை. ஆதி இரும்புக் காலப் பண்பாட்டு மக்கள் எழுத்து முறை ஒன்றைச் சில தேவைகளுக்காகப் பயன்படுத்தினர் என்பதை மறுப்பதற்கில்லை. அவர்கள் குறிகள் பலவற்றைக் கொண்ட ஓர் எழுத்து முறையைப் பயன்படுத்தினர். இக் குறிகள் அவர்கள் விட்டுச் சென்ற மட்பாண்ட ஓடுகள் பலவற்றில் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ளன. இவற்றைப் பிராமி எழுத்தைச் சேராத குறிகள் (non-Brahmi symbols) அல்லது கீறல் குறிகள் (graffiti symbols) எனப் பொதுவாக அழைப்பர்.

இவற்றைப் படித்துப் பொருள் அறியக் கூடிய அளவுக்கு இன்னும் முன்னேற்றம் காணப்படவில்லை. தென்னிந்தியத் தீபகற்பத்திலும் இலங்கையிலும் பிராமி என்ற எழுத்து வழக்கில் வருமுன் இக்குறி எழுத்து பயன்படுத்தப்பட்டது. இந்த எழுத்தைப் படித்து மட்பாண்ட ஓடுகளின் கீறல்களுக்குப் பொருள் கொடுக்கும் வரை, இதனைப் பயன்படுத்தி மக்களுடைய மொழி / மொழிகள் பற்றி அறிய இச் சான்றினைப் பயன்படுத்த முடியாது.

பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்ட ஆவணங்கள் கிடைக்கத் தொடங்கும்போது மொழி பற்றிப் பேசக்கூடிய நிலை ஏற்படுகின்றது. தென்னிந்தியா-இலங்கைப் பிராந்தியத்தில் கிடைக்கும் பிராமி எழுத்து ஆவணங்கள் பொ.ஆ.மு.300 க்கு முற்பட்டவை அல்ல. எனினும் இக் காலக் கணிப்புக்கு விதிவிலக்காக இரண்டு இடங்களில் கிடைத்த பிராமி எழுத்துக் கீறல்களைக் குறிப்பிட வேண்டும். ஒன்று ; அனுராதபுரம் மற்றது ஆதிச்சநல்லூர், அனுராதபுரத்தில் சில மட்பாண்ட ஓடுகளில் காணப்படும் பிராமி எழுத்துக் கீறல்கள் பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் காலக் கணிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று 2004இல் ஆதிச்சநல்லூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சில மட்பாண்ட ஓட்டுக் கீறல்களும் பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்பாண்ட ஓடுகளிலுள்ள கீறல்கள் அவை காணப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்தோர் பேசிய மொழியை அறிந்து கொள்ளத் திட்டவட்டமான சான்றுகளாகக் கொள்ளமுடியாது. மட்பாண்டங்களில் பொதுவாகப் பெயர்களே எழுதப்பட்டன.

இப் பெயர்கள் மட்பாண்டத்துள் இருந்த பொருள் யாருடையது என்பதைக் குறிக்கும் உடைமைப் பெயர்கள். வணிகர் தம் வர்த்தகப் பொருட்களை மட்பாண்டங்களில் எடுத்துச் சென்றபோது தம் பெயர்களை அப் பாண்டங்களில் பொறித்தனர்.

ஆகவே மட்பாண்டங்களில் காணப்படும் பெயர்கள் வர்த்தகத் தொடர்புகளைக் காட்டும் சான்றுகளே. அவை காணப்பட்ட இடத்தில் மக்கள் பேசிய மொழிக்கு அவை திட்ட வட்டமான சான்றுகள் ஆகா. பிராமி எழுத்தின் வரலாற்றை அறியவும் இவை பயனுள்ளவை.


ஆ.இ.காலத்தில் பேசப்பட்ட மொழிகளை அறிவதற்கான எந்த முயற்சியும் நமக்குக் கிடைக்கும் மிகப் பழைய கல்வெட்டுக்கள் மற்றும் இலக்கியப் படைப்புகள் ஆகியவற்றை நுணுகி ஆய்வு செய்வதுடன் தொடங்கும் முயற்சியாகும். இலங்கையில் தற்பொழுது கிடைக்கும் மிகப் பழைய கல்வெட்டுக்கள் (மேற்கூறிய மட்பாண்ட ஓட்டுக் கீறல்கள் தவிர்ந்தவை) ஏறத்தாழ பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவை பிராமி எழுத்தில் உள்ளன. இதனால் இவற்றைப் பொதுவாகப் பிராமிக் கல்வெட்டுக்கள் என்பர்.

ஒரு சிலவற்றைத் தவிர, ஏனையவை குகைகளின் மேல் விளிம்பில் பொறிக்கப்பட்டுள்ளன. இதற்கு விதிவிலக்காக இருப்பவை பாறை, நாணயம், மட்பாண்ட ஓடு, முத்திரை ஆகியவற்றில் எழுதப்பட்டுள்ளவை. இவற்றுள் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை பிராகிருத மொழியில் உள்ளன. விதிவிலக்காக உள்ளவை தமிழில் உள்ளன எனலாம்.(சில வேறு திராவிட மொழியாகவும் இருக்கலாம்) பிராகிருதக் கல்வெட்டுக்களில் சில திராவிட மொழிச் சொற்கள் காணப்படுகின்றன. சில நாணயங்களிலும் ஒரு முத்திரையிலும் தமிழ் (அல்லது வேறு திராவிட) மொழி வாசகங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் கிடைக்கும் மிகப் பழைய கல்வெட்டுக்கள் (ஆதிச்சநல்லூரில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்ட ஓட்டுக் கீறல்கள் தவிர்ந்தவை) இலங்கைக் கல்வவெட்டுக்களைப் போன்று, பொ.ஆ.மு (ஏறத்தாழ) இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஆனால் இவற்றின் மொழி பழைய தமிழ். இக் கல்வெட்டுக்களில் சில பிராகிருத மொழிச் சொற்கள் காணப்படுகின்றன.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

மட்பாண்ட ஓட்டுக்கீறல்கள் பெரும்பாலும் தமிழில் உள்ளன. ஒரு சில பிராகிருதத்தில் உள்ளன. இவற்றை எல்லாம் பொதுப்பட நோக்கினால் தமிழ்நாடு மற்றும் இலங்கை ஆகிய நிலப் பகுதிகளில் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன், அதாவது ஆதி வரலாற்றுக் காலத் தொடக்கத்தில், உயர் குழாத்தினர் பயன்படுத்திய எழுத்து மொழிகளாக இரு மொழிகள் ஆதிக்கம் பெற்றிருந்தன என்பதை அறியலாம்.

பிராகிரும் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளே அவை. (தொடரும்)





ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலாபூஷணம் எஸ்.சண்முகவடிவேல் வித்தியாலய மாணவனால் மலர் மாலையிட்டு வரவேற்கப்படுவதையும், அருகில் அதிபர் ந.சுப்பிரமணியம் நிற்பதை முதலாவது படத்திலும் மாணவர்களின் கலைநிகழ்வுகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படம்: காரைநகர் செய்தியாளர்)

# எயிட்ஸ்/எச்.ஐ.வி. அதிகரிப்பை தூண்டக்கூடிய சமகால மாற்றங்களும், தடுப்பதற்கான அணுகுமுறைகளும் 2

### எச்.ஐ.வி.தொற்றும் முறையும் பாதுகாப்பு முறையும்

எச்.ஐ.வி.தொற்றும் முறைகள் என்பது அதிகளவில் ஒருவரைத் தவிர பலருடன் பாதுகாப்பற்ற முறையில் பாலியல் உறவுகொள்ளும்போதே ஏற்படுகிறது.

தொற்றுள்ள ஒருவரின் இரத்தத்தை ஏற்றும்பொழுதும், தொற்று நீக்கம் செய்யப்படாத மருந்தேற்றும் ஊசி மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஊடாகவும் பரவ வாய்ப்புள்ளது.

மேலும் பிரசவத்தின் போது தாயில் இருந்து பிள்ளைக்கும், கர்ப்ப காலத்திலும் தாய்ப்பாலூட்டும் போதும் தொற்றும் வாய்ப்புள்ளது. தொற்றுள்ள ஒருவருக்கு பாவித்த சவர அலகைப் பயன்படுத்தும் போதும் தொற்று ஏற்பட சந்தர்ப்பங்கள் உள்ளன.

தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு திருமணம் செய்யும் வரை பாலியல் தொடர்புகளைத் தவிர்த்தல் மற்றும் நம்பிக்கைக்குரியவருடன் மாத்திரம் பாலியல் தொடர்பை மட்டுப்படுத்தல் முக்கியமானதாகும்.

பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பேற்படுத்தும் வேளைகளில் ஆணுறைகளைப் பாவித்தல், உரிய முறையில் தொற்று நீக்கம் செய்யப்பட்ட ஊசி, மற்றும் மருத்துவ உபகரணங்களைப் பயன்படுத்தல் அவசியமானது.

பாலியல் சார்ந்த ஏனைய நோய்கள் ஏற்படாமல் சிகிச்சை பெறுதலும் எச்.ஐ.வி தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்கும் வழிமுறைகளாக உள்ளன.

### உலக நிலைப்பாடு

உலகளாவிய ரீதியில்/எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்த போக்கையே கொண்டமைந்துள்ளது. 39.5மில்லியன் பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 17.7மில்லியன் பெண்கள் ஆகவும் 2.3 மில்லியன் குழந்தைகளாகவும் உள்ளனர். 1981-2006 வரை 25 மில்லியன் இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. 2006 இல் 2.9 மில்லியன் இறப்புக்கள் நேர்ந்துள்ளன.

ஒவ்வொரு வருடமும் 5 மில்லியன் புதிய HIV தொற்றுக்களும், 3 மில்லியன் எயிட்ஸ் நோயினால் இறப்புக்களும் ஏற்பட்டு வருகின்றதையும் தரவு ரீதியாக ஆதாரப்படுத்திக் கொள்ளமுடிகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ள இந்திய நாட்டில் எயிட்ஸ் நோய் தாக்கம் தீவிரமாக அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. குறிப்பாக தமிழ் நாட்டில் 2005 ஆம் ஆண்டின் புள்ளி விபரப்படி 52ஆயிரத்து 30 பேர் அதிகூடிய எண்ணிக்கையாக இனங்காணப்பட்டுள்ளனர். இதற்கு பாலியல் தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தொடர்பு ஆகியன முக்கிய காரணியாக அமைகின்றதை ஆய்வுகள் ஆதாரப்படுத்துகின்றன.

### இலங்கை நிலவரம்

முதல் முதல் இலங்கையில் 1986 ஆம் ஆண்டில் வெளிநாட்டவர் ஒருவர் இந்நோய்க்கு ஆளாகி இனங்காணப்பட்டார். பின்னர் 1987 இல் இலங்கை நாட்டைச் சேர்ந்தவர் தொற்றுக்குள்ளானார்.

ஆரம்ப காலத்தில் அதிகளவில் வெளிநாட்டில் தொற்றுக்குள்ளானோர் படிப்படியாக மாற்றம் பெற்று சமகாலத்தில் உள்நாட்டிலேயே தொற்றுக்கு உள்ளாவோர் அதிகரித்து வருவதை அவதானிக்கமுடிகிறது.

2007 ஆம் ஆண்டின் தரவின் படி 806 எச்.ஐ.வி. தொற்றுள்ள நோயாளர் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் 512 ஆண்களாகவும், 353பேர் பெண்களாகவும் 246 பேர் எயிட்ஸ் நோயாளராகவும் இனங்காட்டப்பட்டுள்ளது. 185 பேர் HIV/AIDS தாக்கத்தினால் இறந்துள்ளமையும் அதில் 62 பேர் வெளிநாட்டவர்களாக உள்ளமையும் கவனிக்கத்தக்கது.

கர்ப்பிணிகளில் 22பேர் தொற்றுக்குட்பட்டோராகவும், 5 ஆயிரம் பேர் மதிப்பீடு செய்யப்பட்ட HIV தொற்றுக்குள்ளோராக வும் இனங்காணப்பட்டுள்ளனனர்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இந்நோயின் தாக்கம் வேகமாக பரவலாடைந்து வருவதை ஆய்வு ரீதியான தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

### யாழ்.மாவட்ட நிலவரம்

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், HIV(+) மொத்த நோயாளர் தொகை 38 ஆகவும், 36 பேர் வெளிநாட்டில் அல்லது வெளிநாட்டிலிருந்து வந்தவர்களினால் தொற்றுக்கு உட்பட்டவராகவும், 2பேர் உள்ளூரில் தொற்றுக்கு உட்பட்டோராகவும், 22பேர் எயிட்ஸ் நோய்த் தாக்கத்தினால் இறப்புக்குள்ளானதையும், 2 பேர் கர்ப்பத்தில் தொற்றுக்கு உட்பட்டோராகவும் உள்ளமையை 2007 செப்ரம்பர் தரவு அறிக்கைகள் ஆதாரப்படுத்துகின்றன. (தொடரும்)

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர்
யா/சரவணை சின்னமடு றோ.க.த.க.பாடசாலை

# பிரித்தானிய வேலைக்கு கட்டாயம்

## தேவைப்படும் ஐ.இ.எல்.ரி.எஸ்




ஐ.இ.எல். ரி.எஸ். என்பது International English Language Testing System என்னும் சர்வதேச ஆங்கில மொழி திறனறி தேர்வு என்பதை அறிவோம். உலகெங்குமுள்ள 6 ஆயிரம் நிறுவனங்கள் ஆங்கில மொழித் திறனறியும் தேர்வாக இதை ஏற்றுக் கொண்டுள்ளன.

இத் தேர்வுகளை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும், பிரிட்டிஷ் கவுன்சில் ஐ.டி.பி- ஐ.இ.எல்.ரி.எஸ்.(அவுஸ்திரேலியா) ஆகியவை கூட்டாக நிர்வகிக்கின்றன.

பிரிட்டனுக்கு பணி நிமித்தம் வரும் வெளிநாட்டினருக் கான தேவைகளை நிர்ணயிக்கும் யு.கே. போர்டர் ஏஜென்சியானது 5 அம்ச அடிப்படைத் தேவைகளை தற்போது நிர்ணயித் துள்ளது.

இவற்றுள் 2 அம்சத்தின் கீழ்க் குறிப் பிட்ட திறமைகள் தேவைப்படும் பணிக ளுக்காக அங்கு வரும் திறமை வாய்ந்த பணியாளர்களை அனுமதிக்கிறது. ஆசிரி யப் பணி,பொறியியல் போன்ற பணிகளுக் காகபிரிட்டனுக்குச் செல்பவருக்கு இது கட்டாயத் தேவையாக மாறுகிறது. இத்த கைய திறன் அடிப்படையிலான வேலைக்குச் செல்பவரின் ஆங்கிலத் திறமை குறித்த தேவைகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஐ.இ.எல்.ரி.எஸ். தேர்வுகளை ஏற்கனவே டயர் ஒன்று பணிகள் என அழைக்கப்படும் சட்டத்தரணி, முதலீட்டாளர் போன்றோருக்கும் தேவை எனக் கூறி வரும் பிரிட்டிஷ் அரசு தற்போது டயர் 2 பணிகளுக்கும் இதைக் கட்டாய மாக்கியுள்ளது.

நல்ல ஆங்கிலத்திறன் உள்ளவர்கள் மட்டுமே ஐரோப்பிய வேலைச் சந்தையில் கலந்து றவாடி பணியாற்ற முடியும் என்பதோடு, பிரிட்டனுடன் ஒருங்கிணைய முடியும் என்பதால் தான் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

ஐ.இ.எல்.ரி.எஸ்., முறையானது சர்வதேச ஆங்கில அறிவுத் திறனனை வெளிக் கொணருவதற்கான சிறந்த கருவியாக விளங்குவதால் பிரிட்டிஷ் அரசின் இந்த முடிவை ஐ.இ.எல்.டி.எஸ். அமைப்பும் இதை வரவேற் றுள்ளது.

ஆர்.யூ.பாலமுருகன்

# தெரிந்துகொள்வோமா?



**Bandwidth:** இணைக்கப்பட்ட இரு வேறு சாதனங்கள் இடையே நடைபெறும் டேட்டா பரிமாற்றத்தில் அதிக பட்ச டேட்டா பரிமாற்ற வேகத்தின் அளவை இது குறிக் கிறது.இது டேட்டா பயணிக்கும் வேகம் அல்ல.

**Firewall:** நெட்வேர்க் (இன்டர் நெட் உட்பட) கில் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு கணனியின் உள்ளே அனுமதியின்றி வரும் அடுத்தவரின் முயற்சியைத் தடுக்கும் ஒரு சொப்ட் வெயர் அல்லது சிறிய ஹார்ட் வெயர் சாதனம்.

**Internet Telephony:** வழக்கமான டெலி போன் இணைப்பில்லாமல் இன்டர்நெட் மூலம் தொலைபேசி தொடர்புகொண்டு பேசும் முறைக்கு இந்தப்பெயர்.

**Peer to Peer:** கணனிகளை ஒன்றுக் கொன்று நேரடியாக எந்த சேர்வரின் துணை யின்றி இணைக்கும் முறைக்கான பெயர்.

**Port:** ஒரு அப்ளிகேஷன் புரோகிராமிற் கெனத் தனியாக ஒதுக்கப்பட்டு டேட்டா பரி மாறுவதற்கென உள்ள வழி.

**Trojan:** கெடுதல் விளைவிக்கும் ஒரு புரோகிராம். இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற வகையில் இது ஒரு நல்ல புரோகிராம் போலக் காட்சி அளிக்கும். எடுத்துக்காட்டாக ஒரு கேம்ஸ் புரோகிராம் போலக் காட்சி அளிக் கும். அல்லது கடவுள் பெயரால் மத சம்பந் தமான புரோகிராம் போலத் தோற்றமளிக்கும்.

அடிப்படையில் உங்கள் கணனியில் சென்றவுடன் உங்கள் தனிப்பட்ட தகவல் களை, பாஸ்வேர்ட் பேங்க் எக்கவுண்ட எண்,திருடி இந்தப் புரோகிராமில் செட் செய்த முகவரிக்கு கணனியில் இயக் குபவருக்கு தெரியாமல் அனுப்பி வைக்கும்.

**LCD:Liquid crystal Display:** குறைந்த மின் சக்தியைப் பயன்படுத்தி சிறிய தட்டையான டிஸ்பிளே பனல்கள் மூலமாக படம் காட்டும் நவீன சாதனம். டிஜிட்டல் வோட்ச் முதல் கம்ப்யூட்டர் மொனிட் டர் மற்றும் டீவிக்களில் பயன்படுத்தப் படுகிறது.

**TET:Thin Film Transistor:** மிகவும் குறைந்த அளவில் தடிமன் கொண்டு தட்டையான வடிவில் இயங்கும் ஸ்கிரீன் தரும் தொழில்நுட்பமாகும். கணனி மொனி ட்ர் மற்றும் டிஜிட்டல் கமராக் களில் அதிகம் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படு கிறது.மொபைல் போன்களிலும் இது அதிகம் பயன்பாட்டில் உள்ளது. இது மிகவும் உயர்ந்த திறன் கொண்டது. பல இலட்சக் கணக்கான கலர்களைக் காட்டும் திறன் கொண்டது.

# ஓடியோ எடிட் செய்திட வேண்டுமோ?

இந்த வார இணையத் தளமாக எதனைக் கொடுக்கலாம் என்று சற்று யோசித்த போது பல வாசகர்களின் வேண்டுகோளினை நிறை வேற்றலாமே என்ற நோக்கம் முன்னிலை யில் வந்தது.

## இந்த வார டவுன்லோட்

பாடல்களைத் தாங்களே பிரிக்க வேண் டும். எடிட் செய்திட வேண்டும். அதற்கான இலவச புரோகிராம்களில் சிறந்தது ஒன்றைக் கூறுங்கள் என்று பலர் தொடர்ந்து கேட்ட வண்ணம் உள்ளனர். இவர்களின் கேள்விக்கு பதில் கூறும் வகையில் இத்தகைய பல புரோகிராம்களை இயக்கிப் பார்த்தபோது Audacity என்ற புரோகிராம் சிறப்பாகத் தெரிய வந்தது. அதனைப் பற்றிய சில குறிப் புகள்.

இது ஒரு ஓடியோ பைல் எடிட்டிங் புரோ கிராம். இந்த இலவச பரோகிராமினை http:/audacity.sourceforge.net/download/windows என்ற முகவரியில் இலவசமாகப் பெறலாம்.

இதனை இறக்கி பதிந்துவிட்டால் எந்த ஒரு ஓடியோ பைலையும் எடிட் செய்திடலாம். எடுத்துக்காட்டாக உங்களுக்குப் பிடித்த திரைப்படப் பாடல் ஒன்றில் குறிப்பிட்ட சில வரிகள் பிடித்திருந்தால் அதனை மட்டும் பிரித்து எடுத்து தனி எம்பி 3 பைலாக வைத்து இயக்கி ரசிக்கலாம். அல்லது உங்கள் மொபைல் போனுக்கு மாற்றி உங்கள் போனில் வசதி இருந்தால் அதனை ரிங் போனாகவோ அல்லது சிக்னேச்சர் போனாக வோ பயன்படுத்தலாம்.

அத்துடன் உங்கள் வீடியோ ட்ரேக் குகளுக்கு ஓடியோ வினை மிக்ஸ் பண்ண லாம்.ஓடியோ ட்ரேக்குகளையும் மாற்றி அமைக்கலாம். இதுபோல நூற்றுக்கணக் கான ஓடியோ விடயங்களை இதில் செயல் படுத்தலாம்.

மொத்தத்தில் இது ஒரு மினி ரெகோர்டிங் ஓடியோ ஸ்டூடியோ எனலாம். இந்த புரோ கிராம்களுக்கு ஓட் ஓன் புரோகிராம்களும் தரப்பட்டுள்ளன. இவற்றையும் அதே தளத் திலிருந்து இறக்கிப் பயன்படுத்தலாம்.




# ஒன்லைன் படிப்பில் சாதிக்க

## என்ன செய்ய வேண்டும்?



வீட்டில் இருந்தபடியே முன் னணி கல்வி நிறுவனங்களில் படிக்க விரும்புவர்களுக்களுக் காக தொலைநிலையக் கல்வித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள் ளன.

தற்போது ஒன்லைனிலும் தொலைநிலை படிப்புகள் வழங் கப்படுகின்றன. மாசசூசட்ஸ் இன்ஸ் டிடியூட் ஒஃப் டெக்னொலஜி, நேஷனல் புரோகிராம் ஒன் டெக் னாலஜி என்ஹன்ஸ்ட் லேர்னிங் போன்றவற்றின் மூலமாக ஒன் லைனிலும் மாணவர்கள் படிக்க லாம்.

கல்லூரிப் படிப்பை பாதியில் நிறுத்துபவர்களை விட, தொலை நிலைக் கல்வி மூலமாகப் படிப்பவர்களில் பாதியில் நிறுத்துபவர்களின் எண்ணிக்கை 15 சதவீதம் அதிகம்.

எனினும், படிப்பில் ஆர்வம் உள்ள வர்கள் கண்டிப்பாக ஒன்லைன் படிப்பில் சாதிக்க முடியும். ஒன்லைன் படிப்பை வெற்றி கரமாக நிறைவு செய்ய கீழ்க் கண்ட யோச னைகள் உதவும்.

முதலில் படிப்பதற்கான நேரத்தை ஒதுக்கி ஒவ்வொரு நாளும் அதேநேரத்தில் படிப்ப தையே வழக்கமாகக் கொள்ளவேண்டும். நன்றாகப் படிப்பதற்கு சூழலும் நன்றாக அமைய வேண்டும். அது அமைதியான ஒரு தனியறையாக இருப்பது உதவும். படிக்க வேணடிய பாடங்களை பிரித்துக் கொண்டு, சிறிய இலக்குகளை நிர்ணயித்துக்கொண்டு படிக்க வேண்டும்.

இவ்வாறான இலக்குகளை கடக்கும் போது, அவ்வப்போது நடக்கும் தேர்வுகளில் வெற்றி பெறும்போதும், உங்களுக்கு நீங்க ளே சிறிய அளவில் பரிசளித்துக் கொள்ளுங் கள். இது உங்களை உற்சாகப்படுத்த உதவும்.

ஒன்லைன் படிப்புகளை பொறுத்தவரை தொழில்நுட்பத்தைப் பெருமளவில் சார்ந்தி ருக்க வேண்டியுள்ளது. எனவே, கடைசி நேரம் வரை காத்திருக்காமல், புராஜெக்ட்க ளை முன்பே முடித்துவிட வேண்டும். தொழில் நுட்ப தடங்கல்கள் படிப்பை பாதிக்க விடக் கூடாது.

ஆசிரியர்களிடம் அவ்வப்போது தொடர்பு கொண்டு சந்தேகங்களை போக்கிக் கொள்ள வேண்டும். ஒன்லைன் பாடங்களையே சார்ந்திருக்காமல் படிப்பில் உங்கள் முன் னேற்றம் குறித்து ஆசிரியருடனும் கலந்தா லோசனை செய்வது மிகுந்த பலனைத் தரும். உங்களைப் போல ஆன்லைனில் படிப்பவர் களிடம் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளுங் கள். உங்களுக்கு தெரிந்த நண்பர்களில், அப்படி யாரும் படிக்கவில்லையெனில், ஆசிரியரிடம் விசாரித்து தெரிந்து வைத்துக் கொள்ளலாம்.

அவர்களை நேரில் சந்தித்தோ, தொலை பேசி, இ-மெயில் மூலமாகவோ தொடர்பு கொண்டு பாடங்களை விவாதிக்கலாம் . கல் லூரியில் அமைவதைப் போன்ற நண்பர் குழுவைப் பெற முடியாது.

எனினும் சில நண்பர்களையாவது ஏற் படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும். தொடர்ந்து தனியாகவே படிப்பதால் ஏற்படும் சோர்வை போக்கிக்கொள்ள இது உதவும்.

# நினைவில் கொள்ளுங்கள்



கணனி நல்மாக இயங்க நாம் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என பல கட்டுரைகள் இந்த மலரில் வெளியாகியுள்ளன. பாதுகாப்புக் குறித்த பல்வேறு தகவல்கள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. பலர் புத்தாண்டு சபதங்கள் பல எடுப்பார்கள். இங்கும் இந்தப் புத்தாண்டில் எமது கணனிகளுக்காக என்ன சபதங்கள் எடுக் கலாம் என்று பார்க்கலாம்.

*1. உங்களுடைய ஒப்பரேட்டிங் சிஸ்டம் அப்டேட்டட் ஆக இருக்கவேண்டும்.புதிய ஒப்பரேட்டிங் சிஸ்டத்திற்கு மாறவேண்டும் என்பதில்லை. பயன்படுத்தும் ஒப்பரேட்டிங் சிஸ்டத்திற்கான அண்மைக் காலத்திய அப்டேட்டட் பைல்கள் இறக்கப்பட்டு பதியப் பட்டிருக்க வேண்டும்.*

*2. நீங்கள் அரும்பாடுபட்டு உருவாக்கிய தகவல்கள் அடங்கிய பைல்கள் பாது காப்பாக இருக்க சிறப்பான அண்டி வைரஸ் இருக்கவேண்டும். அதுவும் அவ்வப் போது அப்டேட்டட் ஆக இருக்கவேண்டும்.*

*3. தேவையில்லாமல் கணனி பூட் ஆகும்போதே தொடங்கி பின்னணியில் இயங்கும் புரோகிராம்கள் உங்கள் கணனிப் பணியை மந்தப்படுத்தும்; தாமதப் படுத்தும்.எனவே தேவையற்ற புரோகிராம்கள் இருந்தல் நீக்கி விடுங்கள்.*

*4. பயர்வோல் ஒன்று அவசியம் வேண்டும். விண்டோஸ் இயக்கத்துடன் வரும் பயர்வோல் கூடப் போதும்.*

*5. டூல் பார்களை அவ்வப்போது ட்யூன் செய்திடவேண்டும்.தேவைப்படும் டூல் பார்களை மட்டும் இயங்க வைத்திட வேண்டும்.தேவையற்ற டூல் பார்களை மூடி விட்டால் ரம் மெமரியில் இடம் கிடைக்கும். கணனியும் வேகமாக இயங்கும்.*

# ...த் திட்ட திறப்பு விழா

...நடாவில் மண்டபக் காடு (32 வீடுகள்)

...ல்வாய் வடமேற்கு (33 வீடுகள்)

## ...முன்னாள் சர்வதேச தலைவர் லயன் மகேந்திர

## ...2009.01.19 ஆம் திகதி வைபவரீதியாக

LCIF

LIONS CLUBS INTERNATIONAL FOUNDATION

### LCIF தலைவரின் செய்தி



...2004இல் ஏற்பட்ட சுனாமி யால் ...துவரை ஏற்படாத மோச மான ...ழிவு ஏற்பட்டதை யாவரும் அறிவர். ...ந்த அனர்த்தத்தினால் பாதிக்கப் ...வர்களுக்கு உடனடிச் சேவை களை ...ங்குவதில் லயன்ஸ் உறுப் பினர் ...முன்னணி வகித்துச் செயற்பட்டனர். அதே போல ...ழந்தவர்களுக்கு நிதியைப் பயன்படுத்தி வீடு ...ளைக் கட்டிக்கொடுக்கும் முயற்சியிலும் அவர்கள் ...ன்னணி வகித்தனர்.

...இலங்கைக்கு 7 மில்லியன் US டொலர்கள் LCIF ஆல் ...மைப்புக்காக வழங்கப்பட்டது. யாழ்ப் பாணத்தில் ...ல் கட்டமாக எட்டு இடங்களில் 249 வீடுகள் ஆரம் ...கப்பட்டு இப்போது 136 வீடுகள் கட்டி முடிக்கப் ...டுள்ளது மகிழ்ச்சி அளிக்கின்றது.

...முன்னாள் சர்வதேசப் பணிப்பாளரும் சுனாமி ...கட்டமைப்பு புனர்வாழ்வுக் குழுத்தலைவரான ...ன் சக். விஜேநாதன் அவர்களுக்கும் குழு உறுப் ...ர் களுக்கும் விசேடமாக இந்தச் செயல் திட்டத்தை ...க்கிற்கு இட்டுச்சென்று அதனை முடிவுக்குக் கொண்டு ...வதற்கு காரணகர்தாவான முன்னாள் கவுன் ...் தலைவர் லயன் எஸ். சிவானந்தனுக்கும் எனது ...ாட்டுக்கள் உரித்தாகும்.

**லயன் மகேந்திர அமரசூரிய**
**...JF லயன்ஸ் கழகங்களின் சமாசத்தின்**
**நேர்முந்தைய முன்னாள் தலைவரும்,**
**LCIF இன் தற்கால தலைவரும்.**

### TRRC தலைவரின் செய்தி



சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட மைக்கும் பணியின் முதலாவது கட்டத்தைப் பூர்த்தி செய்தமைக்காக சுனாமி வீட மைப்பு (வடக்கு) திட்டக் குழுவின் தலைவருக்கும், உறுப்பினருக்கும் எனது பாராட்டுக்கள். நாம் வீடுகளை அமைக்கும் அதே சமயம் வீடுகளை இழந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும் அவசியமாகும் .

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத் துக்கொடுப்பதற்காக நன்கொடை வழங்கிய உலகம் பூராவு முள்ள லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கு எமது நன்றி உரித்தாகும். மீள மைப்புப்பணிகளுக்கு உதவி வழங்குவதற்காக லயன்ஸ் கழகங்க ளின் சமாச பவுண்டேசன் (LCIF) தலை வருக்கும், சபை உறுப்பி னர்களுக்கும் இடையறாது கொண்டிருக்கும் உறுதிக்காக வும் எனது நன்றிகள். இந்த நாட்டின் தேவைகளை புரிந்துகொண் டிருக்கும் (LCIF) இன் பணியாளர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மிக விசேடமாக சுனாமி நன்கொடை நிர்வாகிக்கும் திட்ட இணைப் பாளருக்கும் சுனாமி குழுக்களின் உறுப்பினர்களுக்கும் தங்கள் நேரத்தை தங்கள் செயற்றிட்டங்களுக்கு அர்ப்பணித்தமைக்காகவும் சுனாமி அனர்த்தத்தை திரும்பிப் பார்க்கும் வீட்டு பயனாளிகள் அது தங்கள் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து தமது முன்னேற்றத்திற்கும் சிறப்பிற்கும் வாய்ப்பான சந்தர்ப்பத்தை ஏற் படுத்தித் தந்தது எனக் கருத இயல வேண்டும் என்பது எனது பிரார்த் தனையாகும்.

**லயன் சக் விஜேநாதன் MJF**
**சுனாமி மீள் கட்டமைப்பு புனர்வாழ்வுக் குழு**
**(TRRC) தலைவரும் முன்னாள்**
**சர்வதேச பணிப்பாளரும்.**

### அரச அதிபரின் செய்தி



மிக மோசமான அழிவை ஏற்படுத்திய சுனாமி அனர்த்தம் பருத்தித்துறை, வட மராட்சி கிழக்குப் பகுதிகளில் பாரிய அள வில் உயிர் , பொருளாதாரச் சேதங்களை ஏற் படுத்தியது. அழிந்த வீடுகளை மீள நிர் மாணிப்பதற்கு மற்றைய அரச சார்பற்ற நிறு வனங்களிடையே சர்வதேச லயன்ஸ் கழ கம் முக்கிய பங்கை வகிக்கிறது.

ஆரம்பத்தில் பருத்தித்துறையில் உள்ள ஆனை விழுந் தான் பகுதியில் 200 வீடுகளை கட்டுவதற்காக வழங்கப் பட்ட காணி சுற்றாடல் காரணங்களுக்காக இரத்துச் செய் யப்பட்டாலும் இந்த நிறுவனம் மனம் தளராது பொறுப் புடன் வேறு காணிகளை தேடிப்பெற்று உறுதியுடன் தமது நோக் கத்தை நிறைவேற்றி வருவது பாராட்டுதற்குரியது. இவ்வாறான அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டியது எம் எல்லோரினதும் கடமையாகும். இதனை உணர்ந்து செயற்பட்டு வரும் லயன்ஸ் கழகத்தின ரின் இப்பணிக்கு எனது மனமார்ந்த வாழ்த் துக்களை தெரிவிக்கிறேன். சமூக நற்பணிகளில் ஈடுபட்டு வரும் இந்நிறுவனம் தொடர்ந்தும் மக்கள் நலன் சார்ந்த பணிகளைச் சிறப் பாக முன்னெடுப்பதன் மூலம் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடிக்க எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**க.கணேஷ் SLAS**
**அரசாங்க அதிபர்/மாவட்டசெயலர்**
**யாழ்.மாவட்டம்**


### மாவட்ட ஆளுநரின் செய்தி



தற்போதைய LCIF தலைவரும் நேர்முந்தைய முன் னாள் சர்வதேச தலைவருமான லயன் மகேந்திர அமரசூரிய MJF அவர்கள் வட இலங்கையில் கட்டப்படும் 450 வீடுகளில் முடிவடைந்த வீடுகளை கையளிக்கும் வைபவத்தின் போது மாவட்ட ஆளுநர் என்ற வகையில் இந்த செய்தியை அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வீடுகளை சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சமாசத்தின் நிதிப்பிரிவு 306ஆம் இலக்க பல்மாவட்டத்திற்கு அனுப்பபட்ட நிதியிலிருந்து அமைக்கப்பட்டவை. 306 B1 மாவட்டத்தைச் சேர்ந்த லயன்ஸ் உறுப்பினருக்கு லயன் மகேந்திர அமரசூரிய MJF அவர்கள் அளித்த ஊக்கத்திற்கும் ஆதரவிற்கும் மாத்திரமன்றி இந்த வீடுகளை வடக்கில் உள்ள பயனாளிகளுக்கு தாமே நேரில் வந்து கையளிப்பதுபற்றி தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

யாழ். போதனா வைத்திய சாலையின் கண் சிகிச்சைப்பிரிவு, அதி தீவிர சிகிச்சைப்பிரிவு ஆகியவற்றிற்கு LCIF அளித்துள்ள நிதியுதவி மூலம் சமீ பத்திய வெள்ள நிவாரணம் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வீட மைப்பு ஆகியவற்றின் மூலம் லயன்ஸ் கழகங்களின் செயற்பாட்டை நன்கறிந் துள்ளனர். வடக்கைச் சேர்ந்த லயன்ஸ் கழக உறுபபினர்கள் மிகவும் கஷ்ட மான சூழ் நிலையிலும் தமது பங்களிப்பைச் செலுத்தி சமூகத்தில் குறைந்த மட்டத்தில் உள்வர்களுக்கு உதவி செய்து வருகின்றனர். வடக்கில் உள்ள லயன்ஸ் உறுப்பினர்கள் சகல துறைகளிலும் ஆற்றப்படும் சேவைத் திட்டங் களில் தன்னூக்கத்துடன் 'நாம் சேவை புரிகிறோம்' என்ற லயன்ஸ் கழகத் தின் தொனிப் பொருளுக்கு ஏற்ப செயற்படுவது பாராட்டுக்குரியது.

**லயன் நிமால் இராஜபக்ஷ MJF**
**மாவட்ட ஆளுநர் 306B1 2008-2009**



...துத் தந்துள்ளனர். அத்துடன் நில்லாது எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கெருடாவில் ...பயும் ஏற்படுத்தித்தந்துள்ளனர். இவற்றின் மூலம் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள

*தங்கராசா செல்லப்பாக்கியம் (ஒரு பயனாளி)*

### வரவேற்புக்குழு

இணைத் தலைவர்: லயன் எஸ்.சிவராஜேஸ்வரன், பிரதி கபினட் செயலாளர் ... கபினட் பொருளாளர், லயன் Dr.வி.தியாகராஜா MJF,J.P மாவட்ட இணைப்பாளர் லயன் ...ணராஜா MJF, மாவட்ட இணைப்பாளர் லயன் பி.ஆர்.ரஞ்சன் மாவட்ட இணைப்பாளர்,லயன் ...ஸ்தீபன் லெனாட் MJF, லயன் வி.சிறிபிரகாஷ் பிராந்திய தலைவர். லயன் கே.கங்கை வேணி யன் ... தலைவர். லயன் எஸ்.ஞனராஜா மாவட்டத் தலைவர். லயன் எஸ்.சிறினிவாசன் மாவட் டத் தலைவர். ...ச்செல்வன் தலைவர் வடமராட்சி லயன்ஸ் கழகம் லயன் ஆர்.ஜனக்குமார் லயன் கே.தணிகாசலம்.

### ...னத்தில் சுனாமி வீடமைப்பு

**...வீடமைப்புத்திட்ட (வடக்கு) தலைவரும்**



...ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிப் பேரழிவைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட சகல நாடுகளுக்கும் வீடு ...டுத்தது. இவ்வாறு இலங்கைக்கு கிடைத்த பணத்தில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு 22 கோடி ரூபா ...இலங்கையிலுள்ள 6 லயன்ஸ் மாவட்டங்களை உள்ளடக்கிய பல் மாவட்டம் 306 சுனாமி மீள் ...தி ஒவ்வொன்றும் ரூபா 500,000/- பெறுமதியான வீடுகளை கட்டுமாறு பணித்தது. ...டன. பின்னர் லயன் எஸ். சிவானந்தன் MJF அவர்களின் பெரும் முயற்சியால் இந்த எண்ணிக்கை ...ங்களாக ஆரம்பிக்கப்பட்டு அரை குறை வேலையுடன் எம்மால் பொறுப்பேற்கப்பட்டன. இவற்றை திட்டமிட்டு நடை ...அதிபர் கே. கணேஷ் அவர்களும் வடமராட்சி பிரதேச செயலரான திரு ஆர்.வரதீஸ்வரனும் எமக்கு பல வழிகளிலும் ...ளைச் செய்து வரும் TRRC தலைவர் சக் விஜேநாதன் MJF , திட்ட இணைப்பாளரான லயன் உப்பாலி சமரசிங்க MJF, எமது ...தன் MJF, சென்ற வருட மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.இராகவன் MJF J.P ஆகியோருக்கு எமது நன்றி உரித்தாகும்.

### சுனாமி வீடமைப்புத் திட்ட (வடக்கு) குழு

**தலைவர் :** லயன் K. துரைராஜா மாவட்ட இணைப்பாளர்
**செயலாளர்:** லயன் M.சோமசுந்தரம், மாவட்டத் தலைவர்
**நிர்வாகசபை:** லயன் Dr.வி.தியாகராஜா MJF J.P மாவட்ட இணைப்பாளர்.
லயன் T.சற்குணராஜா MJF, மாவட்ட இணைப்பாளர்
லயன் அன்ரன் சில்வெஸ்ரர், மாவட்ட இணைப்பாளர்
லயன் S.இரவீந்திரா, மாவட்ட இணைப்பாளர்
லயன் V.சிறிப்பிரகாஸ், பிராந்தியத் தலைவர்
லயன் S.ஸ்ரீநிவாசன், மாவட்டத் தலைவர்
லயன் K.கமலேஸ்வரன், மாவட்டத்தலைவர்
லயன் R.ஜனக்குமார்
லயன் Dr. M.தங்கராஜா

# மும்பைத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

## முஷாரப் வலியுறுத்தல்



(கலிபோர்னியார்)

மும்பைத் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என பாகிஸ் தான் முன்னாள் அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறினார். கலிபோர்னியாவில் உள்ள ஸ்டான் போர்ட் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே உரையாற்றிய முஷாரப் மும்பைத் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் குறித்து ஆதாரங்கள் இருந்தால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆனால், இதுகுறித்து அதீத ஆரவாரத்தை ஏற்படுத்தக் கூடாது. அப்படி செயல்பட்டால், இரு நாடுகளிடையேயான அமைதிக்கான நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்படும்.

தீவிரவாத குழுக்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதேவேளை, தீவிரவாதக் குழுக்கள் உருவாகக் காரணமாக இருக்கும் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். வறுமை, கல்வியறிவின்மை, அரசியல் ரீதியாக ஒதுக்கப்படுதல், காஷ்மீர் , பாலஸ்தீனம் போன்ற அரசியல் ரீதியான பிரச்சினைகளே தீவிரவாதம் உருவாக அடிப்படைக் காரணங்களாகும்.

தீவிரவாதிகள் இல்லாத உலகைப் படைக்க வேண்டுமானால் முதலில் இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். நாம் நுனிப்புல் மட்டுமே மேய்ந்து கொண்டிருக்கிறோம். பிரச்சினையின் ஆணிவேர் பற்றி கவலைப்படுவதில்லை. பாகிஸ்தானில் தீவிரவாதத்தை வேரறுக்க அமெரிக்காவும், சர்வதேச சமுதாயமும் அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றார். (6)

# அமைதியை நிலை நாட்ட பாடுபடும் நேரம் இது

## ஒபாமா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஈராக் ஆப்கானிஸ்தானில் நடந்துவரும் போர் மட்டுமன்றி, பொருளாதார நெருக்கடியால் அவதிப்பட்டு வரும் நிலையில், அமெரிக்க அதிபர் பொறுப்பை ஏற்க உள்ளேன். அமைதியை நிலைநாட்டவும், வளர்ச்சியில் மேம்பாடு காண்பதற்கும் அதிகளவில் அமெரிக்கர்கள் பாடுபட வேணடிய நேரம் இது என்று பராக் ஒபாமா கூறியுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை அமெரிக்க அதிபராக பொறுப்பேற்கவுள்ள ஒபாமா அதிபராக தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ரேடியோவில் வாராந்த உரையாற்றி வருகிறார். அதிபராக பொறுப்பேற்பதற்கு முன் கடைசியாக நேற்று முன்தினம் அவர் ரேடியோவில் வாராந்த உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது, அமெரிக்க மக்களுக்கு எதிராக மிகப் பெரும் சவால் எழுந்துள்ள நேரம் இது .நமக்கு, கடுமையான நாட்கள் காத்திருக்கின்றன. ஈராக், ஆப்கானிஸ்தானில் போர் நடத்துகிறோம். பொருளாதார நெருக்கடியும் உள்ளது. அமைதியை நிலைநாட்டவும் வளர்ச்சியில் மேம்பாடு காண்பதற்கும், அதிகளவில் அமெரிக்கர்கள் பாடு படவேண்டிய நேரம் இது.

அமெரிக்க அதிபர் பொறுப்பு மாற்றத்தில் புஷ் நிர்வாகம் அளித்து வரும் ஒத்துழைப்பு, பெரிதும் பாராட்டுக்குரியது. எனது பதவிக் காலத்தில் செயல்படுத்த வேண்டிய விடயங்கள் ஏராளமாக உள்ளன. ஆனால், தற்போது புதிய தொடக்கத்துக்கு அமெரிக்கர்கள் அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்து நிற்க வேண்டிய நேரம் இது. நிர்வாகப் பொறுப்பு மாற்றம் என்பது அமெரிக்காவில் சுமுகமாக நடந்து வரக் கூடியதுதான் என்றாலும், உலகின் பல நாடுகளில் இப்படிப்பட்ட



நிலை இல்லை.

வயதான பலரும், அதிகாரம் தங்களிடம் இல்லாமலோ, தங்களுக்கு சாதக மாக இல்லாமலோ இருக்கும் நிலையில், வாழ்க்கை நடத்தப் பெரும் போராட்டம் நடத்த வேண்டிய நிலை உள்ளது. தொடக்க விழாவில் 15 இலட்சத்துக்கும் அதிகமானோர் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கிறோம். அமெரிக்க வரலாற்றில், எல்லோரும் பகிரங்கமாகக் கலந்துகொள்ளும் விழா இது என்றார். (6)

# சிறுமியின் குறுந்தகவல் சாதனை

அமெரிக்காவின் ஆர்லாண்டோ நகரைச் சேர்ந்த எமிலி கோக்ஸ் என்ற 14 வயது சிறுமி, ஒரே மாதத்தில் தனது செல்போனில் 35 ஆயிரத்து 463 குறுந்தகவல்களை அனுப்பி சாதனை படைத்திருக்கிறாள்.

தினமும் தூங்குவதற்காக அவர் 8 மணி நேரம் ஒதுக்கிக்கொண்டார் என்று வைத்துக் கொண்டால் எமிலி ஒரு மணிநேரத்துக்கு சராசரியாக 71 குறுந்தகவல்களை அனுப்பியிருக்கிறார்.

மகளின் சாதனை பற்றி தந்தை பிராட் கூறுகையில், " அண்மையில் ரெய்னா என்ற சிறுமி ஒரே மாதத்தில் 14 ஆயிரத்து 528 குறுந் தகவல்களை அனுப்பியதாக புகைப்படத்துடன் பத்திரிகைகளில் செய்தி வெளி வந்திருந்தது. அதைப் படித்ததும் எனது மகள் ஒவ்வொரு மாதமும் , இவளை விட அதிகமாக செல்போனில் நான் குறுந் தகவல்களை அனுப்பிக்கொண்டிருக்கிறேன். இதென்ன பிரமாதம்?... என்று சிரித்தாள்.

பிறகு, " இதை விட இரண்டு மடங்கு தகவல்களை என்னால் எனது தோழிகளுக்கும், ஆண் நண்பர்களுக்கும் அனுப்ப முடியும்" என்று கூறினாள். தற்போது அதை நிரூபித்தும் இருக்கிறாள் என்று புளங்காகிதம் அடைகிறார். (6)

# காசாவில் உடனடி போர் நிறுத்தம் கோரி ஐ.நா.சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(நியூயோர்க்)

காசா பகுதி மீது இஸ்ரேல் நடத்தி வரும் இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்தக் கோரி ஐ.நா.சபையில் நேற்று முன்தினம் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 142 நாடுகள் வாக்களித்தன. 4 நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. 8 நாடுகள் வாக்களிக்கவில்லை. 192 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. சபையில் மின்னணு வாக்குப் பதிவில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக 38 நாடுகளின் வாக் குகள் பதிவாகவில்லை. (6)


YARL BEACH HOTEL

VATHIRI ROAD, UDUPPIDDY

வடமராட்சியின் ஒரே ஒரு சைனிஸ் உணவகம்

கீழைத்தேய மேலைத்தேய உணவு வகைகள்

கடல் உணவுகள்

தங்குமிட வசதிகள்

ஐஸ்கிறீம் சோடா குளிர்பானம்

புரியாணி பிறைற்றைஸ் நூடில்ஸ்

கொத்துறொட்டி டெவல்ஸ்

தரம், சுவை மலிவு





இன்று ஓராண்டு பூர்த்தியை மனநிறைவுடன் கொண்டாடுகின்றது உங்கள் தேவையே எங்கள் சேவை

யாழ்.பீச் கொட்டேல்

வதிரி வீதி, உடுப்பிட்டி T.P: 021 226 3966

2122

எப்பொழுதும் செய்ய முடிந்த காரியம் ஒரு பொழுதும் செய்யப்படுவதில்லை.

– இங்கிலாந்து

வலம்புரி

## மண்டைதீவு மக்களை அலைக்கும் பொலிஸ் நிர்வாகப் பிரிவு

யாழ்ப்பாணத்திற்கு ஐந்து மைல் தொலைவில் மண்டைதீவுக் கிராமம் அமைந்துள்ளது.

தீவகத்தின் முதற் கிராமமாக அதனைக் கொள்ளலாம். அதேநேரம் யாழ்ப்பாண நகரின் தென் பகுதியில் அமைந்துள்ள மிகக் கிட்டிய தூரத்தில் இருப்பதும் மண்டைதீவே.

மண்டைதீவில் நோய்வாய்ப்பட்ட ஒருவரை ஏழு நிமிடங்களில் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு வாகனங்கள் மூலம் கொண்டுவந்த சம்பவங்களும் உண்டு.

இவ்விதம் யாழ்ப்பாணத்திற்கு மிகக் கிட்டிய தூரத்தில் இருக்கும் மண்டைதீவு மக்களின் பொலிஸ் பிரிவு முன்னர் யாழ்ப்பாணமாகவே இருந்தது. இதனால் அவர்கள் தமது தேவைகளை விரைவாகவும், சுலபமாகவும் செய்து முடித்தனர்.

ஆனால் தற்போது மண்டைதீவுக்கான பொலிஸ் பிரிவாக ஊர்காவற்றுறை உள்ளது. யாழ்ப்பாண நகருக்கு மண்டைதீவு முதற் கிட்டிய ஊராக இருக்கும் அதேநேரம் ஊர்காவற்றுறைக்கு மண்டைதீவே அதி கூடிய தூரத்தில் இருக்கும் இடமாகவுள்ளது.

அப்படியானால் மண்டைதீவை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துடன் இணைத்துக் கொண்டவர்கள் எதனை நோக்காகக் கொண்டனர் என்பது புரியாத புதிராகும்.

அதேநேரம் மண்டைதீவில் இருந்து ஒரு பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு வந்து யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் கருமங்களை முடித்துவிட்டுச் செல்வதற்குப் பதிலாக, இப்போது மண்டைதீவு மக்கள் இரண்டு பஸ் ஏறி சுமார் இருபது கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

இவையெல்லாம் தேவைதானா? எனவே எந்தத் திட்டத்தை -மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்தாலும் முதலில் மக்களின் நலன் கவனிக்கப்படுவதுடன், மக்களின் விருப்பையும் அறிந்து கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து எழுந்தமானமாக தீர்மானங்களை எடுப்பது தேவையற்ற சிக்கல்களையும், உபத்திரங்களையும் ஏற்படுத்தும்.

ஆகவே இது விடயத்தில் பொறுப்புவாய்ந்தவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து முன்பு போல மண்டைதீவை யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குள் அடக்க வேண்டும்.

இதன் மூலம் மக்களின் வீண் அலைச்சல்களும் தேவையற்ற செலவுகளும் தவிர்க்கப்படும்.

பொருத்தமான நடவடிக்கைகளைக் காலதாமதமின்றி அமுல்படுத்துவதானது மக்களுக்கு பெரும் பயனாக அமையும் என்பதால், மேற்குறித்த விடயத்தை உரியவர்கள் விரைவாக செய்து முடிக்க வேண்டும்.

# ஆறுமாத காலத்தில் யாழில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

(கொழும்பு)

அடுத்த ஆறு மாதங்களுக்குள் யாழ்.குடாநாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தல்களை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு அங்கு தேர்தல்கள் நடத்தப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்புச் சூழ்நிலைகள் காரணமாக யாழ்.குடாநாட்டில் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் நடத்தப்படாமல் தடைப்பட்டு வந்ததாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இந்தத் தேர்தல்கள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் வாரங்களில் அதனை அமைச்சரவையில் சமர்பிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அனுமதி பெறப்படும். அதன் பின்னர் யாழ்.குடாநாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் சட்டத்திற்கு உட்பட்டதாக உயர் நீதி மன்றத்தின் விதிகளுக்குஅமையவே இந்தச் சட்டத் திருத்தம் தயாரிக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

வடமாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு மாத்திரம் போட்டியின்றி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் யாழ்ப்பாணம் இராணுவத்தினரின் முழுமையான கட்டுப்பாட்டில் வந்திருப்பதால் குடாநாட்டிலுள்ள எஞ்சிய 33 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல்களை இலகுவில் நடத்தமுடியும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்கள் 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் கோரப்பட்ட போதும் இறுதியில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-5)

# இலங்கைக்கு சுடச்சுடப் பதிலடி ஜேர்மன் அரசு கொடுத்தது

சண்டேலீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரம துங்கவின் கொலை தொடர்பில் ஜேர்மன் தூதுவர் ஜேர்ஜன் வீத் தெரிவித்த கருத்துக்களினால் இலங்கை அரசாங்கம் ஆத்திரமடைந்தது.

கடுப்படைந்த அரசு ஜேர்மன் தூதுவரை அழைத்து விசாரணை நடத்தியது. இவ்விசாரணை ஜேர்மன் அரசுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. ஜேர்மன் தூதுவரிடம் இலங்கை அரசு விசாரணை நடத்தியது.

24 மணி நேரத்தில் ஜேர்மனி அரசாங்கம் தனது நாட்டில் உள்ள இலங்கைத் தூதுவரை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது;

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் வார ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் இறுதி நிகழ்வின் போது இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜேர்ஜன் வீத் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக கோபமடைந்த இலங்கை அரசாங்கம் அவரை அழைத்து தனது கண்டனத்தை தெரிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் ரி.பி.மதுவேகெடராவை ஜேர்மனி நாட்டின் வெளிவிவகார அலுவலகம் அழைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்ட 24 மணி நேரத்திற்குள் ஜேர்மனி அரசாங்கம் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

லசந்த விக்கிரமதுங்கவின் இறுதி நிகழ்வின் போது ஜேர்ஜன் வீத் அப்படி எதனைத் தவறாக கூறியிருந்தார் என கூற முடியுமா என ஜேர்மனி வெளிவிவகார அலுவலகம் ரி.பி. மதுவேகெடராவை கேட்டிருந்ததாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-5)

# லசந்த படுகொலை விசாரணை முடிவுகளை பகிரங்கப்படுத்த முடியாது

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சண்டே லீடர் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை விசாரணைகள் பற்றிய விபரங்களைப் பகிரங்கப்படுத்த முடியாது என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தப் படுகொலை தொடர்பில் பல்வேறு தகவல்கள் கிடைக்கப்பெற்றிருப்பதுடன், நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளைத் தொடர்ந்து வருவதாகவும் பொலிஸ் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர கூறினார்.

நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளன. யார் யார் பொலிஸ் குழுக்களுக்குத் தலைமை தாங்குகிறார்கள், என்ன தடயங்கள் கிடைத்துள்ளன போன்ற விடயங்களைப் பகிரங்கப்படுத்த முடியாது. அவை இரகசியமாகப் பேணப்படுகின்றன.

அதேநேரம் சிரச தொலைக்காட்சி நிறுவனம் மீதான தாக்குதல் குறித்த விசாரணைகளை இரண்டு பொலிஸ் குழுக்கள் நடத்திவருவதாக குறிப்பிட்ட அவர் இந்த தாக்குதல் தொடர்பாக நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

சம்பவ தினத்தன்று பன்னிப்பிட்டியவிலுள்ள தேவ்ராம் விகாரைக்கு சென்ற ஐக்கியதேசியக்கட்சியின் கோட்டை மாநகர சபை உறுப்பினருடன் இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கியுடன் சென்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட நபர் தொடர்பில் பொலிஸில் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை சிரச ஊடகம் மீதான தாக்குதல் குறித்து எதிர்க்கட்சி மீது குற்றம் சுமத்தி மக்களை பிழையாக வழிநடத்த அரசாங்கம் முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

(ந-5)

# வேட்பாளர் பட்டியலில் இராணுவத்தினரின் பெயர்

## அமைச்சர் நிமால் சிறிபால

ஐக்கிய மக்கள்சுதந்திரக் கூட்டமைப்பின் ஒவ்வொரு வேட்பாளர் பட்டியலிலும் குறைந்தது ஒரு படைத்தரப்பினரின் பெயராவது உள்ளடக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி பணிப்புரை வழங்கியிருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டை பயங்கரவாதிகளின்பிடியிலிருந்து மீட்பதற்கு தமது உயிர்களைத் தியாகம் செய்த இராணுவத்தினர் அனைவராலும் நினைவு கூறப்பட வேண்டியவர்கள்.

ஆயிரக்கணக்கான புாதுகாப்புப் படையினர் தியாகங்களைச் செய்துள்ளனர். இவர்களை அனைத்துப் பிரஜைகளும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எனக் குறிப்பிட்ட அமைச்சர், இதன் ஒரு அங்கமாக பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த ஒருவரையாவது மாவட்ட ரீதியான வேட்பாளர் பட்டியல்களில் உள்ளடக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங் கியிருப்பதாகத் தெரிவித்தார்.

அண்மைய காலத்தில் பயங்கரவாதத்தை வெற்றி கரமாகத் தோற்கடித்த நாடுகளில் இலங்கையே தற்பொழுது முன்நிலையில் நிற்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி தனித்தன்மையுடன் இரு



இன்னொன்றையும் அறிந்து கொள்ள வேண்டும் சகோதரா, பிற நாடுகளிடமிருந்து நாம் கற்க வேண்டியவை ஏராளம் உள்ளன. இனி நான் கற்க வேண்டியது எதுவுமில்லை என்பவன் சாவின் அருகில் போய் விட்டான்.

எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று எந்த நாடு கூறுகிறதோ அது அழிவின் எல்லையில் நிற்கிறது. ' வாழும் நாள் வரை நான் கற்கிறேன்.' இது சரி.எங்கிருந்து எதைக் கற்றாலும்அதை நமது அச்சில் அமைத்துக் கொள்ளவேண்டும், அது தான் விஷயம்.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா' 26

# சில பாம்புகள் கைதாகின சிலவற்றுக்கு மரண தண்டனை

என்.விஜயன்

### பாம்புகளுக்கு ஏற்பட்ட இடப்பெயர்வு

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி சுனாமிப் பேரலையினால் ஏற்பட்ட அவலங்களையும், இழப்புகளையும் மனித மொழிகளால் வர்ணித்து விட முடியாது.

இலட்சக் கணக்கான மனித உயிர்கள் அழிந்து போயின.

இத் துயரத்தில் கால்நடைகள் மற்றும் உயிரினங்கள் நிலைமையை முன் கூட்டியே உணர்ந்துகொண்டு பாதுகாப்புத் தேடிக் கொண்டமை அதிசயமான உண்மை.

சுனாமி வருவதற்கு ஒரு கிழமைக்கு முன்பாக மட்டக்களப்பில் ஆயிரக் கணக்கான பாம்புகள் ஓரிடத்தில் குழுமிக்கிடந்த நிகழ்வு அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஆயிரக்கணக்கான பாம்புகள் இவ் விதம் குழுமிக்கொள்வது இயற்கை அழிவை உணர்த்தும் நிகழ்வு என்பதை அப்போது எவரும் உணர்ந்து இருக்கவில்லை.

கடற்கரையோரப் பகுதியில் இருந்து பாம்புகளின் இடப்பெயர்வு எதற்கான தென்ற தேடலில் சிலர் ஈடுபட்டிருந்த போதிலும், அதனால் எந்தத் தீங்கும் இல்லையென மட்டக்களப்பில் பிரபல்யமான சுவாமி ஒருவர் கூறிய கருத்தோடு பாம்புகளின் படையெடுப்புப் பற்றி பொது மக்கள் அதிகம் கவனம் எடுக்கவில்லை.

பின்னர்தான் நிலைமையை உணர்ந்து கொள்ள முடிந்தது. என்ன செய்வது "**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்**" என்ற வள்ளுவனின் கூற்றே பொருத்துடையதாயிற்று.

இயற்கை அழிவுகளின் போதெல்லாம் மிருகங்கள் மற்றும் ஜீவராசிகள் நிலைமையை உணர்ந்து கொண்டு தமக்குப் பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்று விடும்.

ஆனால், நிஷா புயல் -மழை ஏற்பட்ட போது அதன் அறிகுறிகளை மிருகங்களால் உணர்ந்து கொள்ள முடியாமல் போனமை விந்தையே.

தாவடி மற்றும் கோண்டாவில் பகுதியில் நூற்றுக்கணக்கான பாம்புகள் வெள்ளத்தில் இருந்து தப்பித்து வீட்டு மதில்களில் ஏறித் தஞ்சம் புகுந்தன.


ஒரு புறம் வெள்ளம் மறுபுறம் பாம்பு என்ற பயங்கரத்தில் மக்கள் சிக்கிக்கொண்டனர்.

"ஒருபுறம் வேடன் மறுபுறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலை மான்" என்ற சினிமாப் பாடல் வரிகளே நிஷாவினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமையை எடுத்துக் கூறுவதற்கான உதாரணமாகும்.

வெள்ளத்தின் வேகத்தில் இடம் பெயர்ந்த பாம்புகள் எங்கு செல்வது, ஏது செய்வது என்று தெரியாமல் தத்தளித்தன. திருநெல்வேலிப் பகுதியில் நாகபாம்புக் குட்டி ஒன்று நுளம்புத் திரிப் பெட்டி (பெரிது) ஒன்றுக்குள் தஞ்சம் புகுந்து கொண்டது. அந்தப் பெட்டிக்குள் இருந்த துணி ஒன்றை எடுத்தவரை அந்தப் பாம்பு தீண்டி விட, அவர் பரிதாபகரமாக இறந்துபோன சோகமும் நிஷாவின் துன்பப்பட்டியலில் சேர்க்கப்படவேண்டிய தொன்றே.

இது தவிர வெள்ளத்தால் அதிர்ந்து போன பாம்புகள் தமது இருப்பிடத்தை இழந்து அந்தரித்தன. சில பாம்புகள் வீடுகளுக்குள் புகுந்து கொண்டன.

பெருமாள் கோவில் பகுதியில் அகப்பட்ட பாம்பு



இவ்வாறு புகுந்து கொண்ட பாம்புகளை வீட்டின் உரிமையாளர்கள் கைது செய்து இடம் நகர்த்தினர்.

சிலர் எடுத்த எடுப்பிலேயே மரண தண்டனை கொடுத்தனர். 'நாகதோஷம்' என எமது பழம் புராணங்கள் கூறிக் கொள்ளும் வாகடத்தைத் தெரிந்தவர்கள் நாகபாம்பிற்கு மரணதண்டனை கொடுப்பதை விரும்பவில்லை. இதனால் நாகபாம்புகள் தப்பிக் கொண்டன.





எனினும் கறையானின் வீட்டை ஆக்கிரமித்து ஆட்சி பிடித்த பாம்புகளை உடனடியாக வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது போல வெள்ளம் கறையான் புற்றுக்களை நிரப்பிக்கொள்ள பாம்புக் குட்டிகள் பரிதாப மரணத்தை தழுவின. இழப்பின் சோகம் தாங்க முடியாத பெரிய பாம்புகள் இலங்கைத் தமிழர் போல இடம்பெயரலாயின.

இவ்வாறு இடம்பெயர்ந்த நாக பாம்பு ஒன்று பெருமாள் கோயில் வடக்கு வீதியில் உள்ள பிரதீபன் என்பவருடைய வீட்டிற்குச் சென்ற வேளை, அந்தப் பாம்பு கைது செய்யப்பட்டது.

இலண்டன், கனடா போன்ற நாடுகளுக்குச் செல்லும் இலங்கைத் தமிழர்களை அந்த நாடுகள் கைது செய்து நாடு கடத்துவது போல, பெருமாள் கோயில் பகுதியில் கைது செய்யப்பட்ட நாகபாம்பும் யாழ்ப்பாணம் கோட்டை முனியப் பர் கோயில் பகுதிக்கு நாடு கடத்தப் பட்டது. (வளரும்)

# தென்னாபிரிக்கா போராடி தோல்வி; தொடரை சமனிலையாக்கியது ஆஸி.



(ஹோபாட்)

விறுவிறுப்பான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 5-ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று அவுஸ்திரேலிய அணி தொடரை 1:1 என சமனிலை செய்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட்,2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணியும் இருபது-20 தொடரை 2:0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணியும் கைப்பற்றியது.

தொடர்ந்து நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று ஹோபாட்டில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மார்ஷ்-பொன்டிங்கின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 249 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மார்ஷ் 78 ஓட்டங்களையும் அணித்தலைவர் பொன்டிங் 64 ஓட்டங்களையும் மைக்கெல் ஹசி 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நிற்னி 3 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன்,கலிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் டுமினி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 250 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி இறுதிப் பந்துவரை போராடிய போதும் 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 244 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 ஓட்டங்கள்வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் கலிஸ் 72 ஓட்டங்களையும் டிவில்லியர்ஸ் 44,பௌச்சர் ஆட்டமிழக்காமல் 37 மற்றும் டுமினி 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹிவ்பென் ஹயூஸ் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் ஹரிஸ்,ஹோப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி தொடரை 1:1 என்ற கணக்கில் சமனிலை ஆக்கியது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு 72 ஓட்டங்கள் எடுத்து அடித்தளம் அமைத்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்ஷ் ஆட்டநாயகனாக் தெரிவானார்.

# ஆஸி.ஓபன் டென்னிஸ் தொடர் இன்று ஆரம்பம்

## பெடரர் சாதிப்பாரா?

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் இன்று ஆரம்பமாகிறது.இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ரோஜர் பெடரர், இத்தாலி வீரர் ஆந்த்ரே செபியை சந்திக்கிறார்.

தகுதி சுற்றில் தோல்வி கண்ட இந்திய வீரர் சோம்தேவ் பிரதான சுற்றில் ஆடும் வாய்ப்பை இழந்தார்.

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்த போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஒற்றையர் பிரிவில் யார் யாருடன் மோதுவது என்பதை நிர்ணயிக்கும் குலுக்கல் முறை நேற்று முன்தினம் நடந்தது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனான செர்பியாவின் நோவாக் டோகோவிச் தகுதி சுற்றில் வெற்றி பெறும் வீரருடன் மோதுவார்.

14ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று பீட் சாம்பிராசின் சாதனையை சமன் செய்ய காத்திருக்கும் சுவிட்சர்லாந்து வீரான ரோஜர் பெடரர், இத்தாலி வீரர் ஆந்த்ரே செபியை சந்திக்கிறார்.

உலகின் முதல்நிலை வீரரான ஸ்பெய்ன் நாட்டைச் சேர்ந்த ரபெல் நடால்,பெல்ஜியம் வீரர் கிறிஸ்டோபர் ரோச்சஸ்சை எதிர்கொள்கிறார்.

கடந்த முறை 2ஆவது இடம் பெற்ற சிலி வீரர் பெர்னாண்டோ கொனாலெஸ் அவுஸ்திரேலிய வீரர் லெய்டன் ஹெவிட்சை சந்திக்கிறார்.

இந்திய வீரர் சோம்தேவ் தனது 2ஆவது தகுதி சுற்று ஆட்டத்தில் 6:4,4:6,5:7 என்ற செட் கணக்கில் போலந்து வீரர் லூகாஸ்சிடம் தோல்வி கண்டு வெளியேறினார்.




சோம்தேவ் முதல் ஆட்டத்தில் பிரகாஷ் அமிர்தராஜை வீழ்த்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் கடந்த முறை சம்பியனான ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா காயம் காரணமாக இந்த போட்டியில் இருந்து விலகி உள்ளார்.

உலகின் முதல் நிலை வீரரான செர்பியா நாட்டைச் சேர்ந்த ஜெலீனா ஜாங்கோவிச், ஆஸ் திரியா வீராங்கனை மெஸ்பர்ஜெரை சந்திக்கிறார்.

அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், சீன வீராங்கனை யன் மெங்குடன் மோதுகிறார்.இந்திய வீராங்கனை சானியா மிர்சா போலந்து வீராங்கனை மார்டா டோமாஷாகாவை சந்திக்கிறார்.

# ஜெயசூர்யா,மெண்டிஸிற்கு ஆண்டின் சிறந்த வீரர் விருது

## கிரிக்இன்போ இணையத்தளம் வழங்கியது






2008ஆம் ஆண்டிற்கான கிரிக்இன்போ இணையதளத்தின் சிறந்த வீரர்களுக்கான விருதுக்ள் வழங்கப்பட்டன. இதில் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் ஆண்டின் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது இலங்கை அணியின் அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜெயசூரியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒருநாள் போட்டிகளின் சிறந்த பந்துவீச்சாளர்களுக்கான விருது இலங்கை அணியின் இளம் பந்துவீச்சாளர் மட்டுமல்லாமல் இலங்கை அணியின் அடுத்த முரளிதரன் என்று வர்ணிக்கப்படும் அஜந்த மெண்டிஸிக்கு வழங்கப்பட்டுள்ளது.

சனத் ஜெயசூரியாவுக்கு இவ் விருது வழங்க முழுக்காரணம் இந்திய அணி என்றே சொல்லலாம். காரணம் கராச்சியில் நடைபெற்று முடிந்த ஆசிய கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் இந்திய அணியுடன் இலங்கை அணி மோதியது. இதில் இலங்கை துடுப்பெடுத்தாடும் போது இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தனா ஆகியோர் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றனர்.

அடுத்துக் களத்திலிருந்த சனத் ஜெயசூரியா நிதானமாக துடுப்பெடுத்தாடி 125 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட அதே நேரத்தில் இலங்கை அணி ஆசிய கிண்ணத்தின் சம்பியன் என்ற பட்டத்தை பெற்றுக் கொண்டது.

இலங்கை அணியின் நம்பிக்கை நாயகன் அஜந்த மெண்டிஸிக்கு இவ்விருது கிடைக்க காரணமாக அமைந்ததும் இந்திய அணியே. கராச்சியில் நடைபெற்ற ஆசியக் கிண்ணத்தின் இறுதிப்போட்டியில் அஜந்த மெண்டிஸ் 13 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை பெற்றுக்கொண்டார்.

இவரின் பந்துகளுக்கு முகம் கொடுக்க இந்திய அணியின் மூத்த வீரர்களும் சரி, புதிய வீரர்களும் சரி தடுமாற்றத்தின் உச்சிக்கே சென்ற பின்னரே ஆட்டமிழந்தனர்.

அஜந்த மெண்டிஸின் பந்தையும் சனத் ஜெயசூரியாவின் துடுப்பாட்டம் போல எதிர்கொள்ளும் வீரருக்கு பந்துவீச்சை புரிந்து கொள்வது என்பது கஷ்டமான காரியம் என்பதை கராச்சியில் இந்திய அணியின் தடுமாற்றத்திலிருந்தே நமக்கு தெரிந்தது.

அன்று மட்டுமல்லாமல் இன்றுவரை அஜந்த மெண்டிஸ் அதே பந்துவீச்சில் முன்னணியிலேயே திகழ்கிறார்.

டெஸ்ட் கிரிக்கெட்டுக்கான விருது சேவாக்கிற்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் ஆண்டின் சிறந்த பந்துவீச்சாளருக்கான கிரிக்கின்போ விருது தென்னாபிரிக்காவின் டெல் ஸ்ரையனுக்குக் கிடைத்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மெல்போர்னில் இவர் வீழ்த்திய பத்து விக்கெட்டுக்களினால் தொடரை முதல்முறையாக வென்றது தென்னாபிரிக்கா. ஸ்டாட்குருவின் ஆண்டின் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது சந்தர் போலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# மெண்டிஸின் சுழலை சமாளிக்க பாகிஸ்தான் அணி புதிய வியூகம்

(கராச்சி)

இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸின் பந்துவீச்சை சமாளிக்க பாகிஸ்தானிடம் வியூகம் இருப்பதாக அந்த அணியின் தலைவர் சொயிப் மலிக் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சென்று டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதலில் ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுவிட்டு பின்னர் நாடு திரும்பும் இலங்கை, இந்தியாவுடன் ஒருநாள் போட்டிகளில் விளையாடி விட்டு மீண்டும் பாகிஸ்தானில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

இந்த தொடருக்கு பாகிஸ்தான் அணியின் தலைவராக சொயிப் மலிக் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் அண்மைக்காலமாக சிறந்த பந்துவீச்சாளராக விளங்குகிறார்.

அவருடைய துல்லியமான பந்துவீச்சு நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களையே திணற வைத்து வருகிறது. இந்நிலையில் மெண்டிஸின் பந்துவீச்சை சமாளிக்க பாகிஸ்தானிடம் வியூகம் இருப்பதாக சொயிப் மலிக் கூறியுள்ளார்.

அஜந்த மெண்டிஸ் மற்றும் முரளிதரன் பந்துவீச்சை எப்படி சமாளிப்பது என்று விரிவாக யோசித்து அதற்கேற்ற உத்திகளை உருவாக்கியிருப்பதாக மலிக் கூறியுள்ளார்.

(5)

# இலங்கை தொடர்; இந்திய அணி அறிவிப்பு

(மும்பை)

இந்திய கிரிக்கெட் அணி எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கை வருகிறது. இச்சுற்றுப் பயணத்தில் இலங்கை அணியுடன் 5 ஒரு நாள் போட்டி,ஒரு இருபது-20 போட்டி ஆகியவற்றில் விளையாட உள்ளது.

முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி தம்புள்ளவில் நடக்கிறது. இதற்கான இந்திய அணி தேர்வு நேற்று மும்பையில் நடந்தது. தேர்வுக் குழு தலைவர் ஸ்ரீகாந்த் தலைமையிலான குழுவினர் வீரர்களை தேர்வு செய்தனர்.

காயம் காரணமாக ஹர்பஜன் சிங் இடம் பெறவில்லை. சகலதுறை வீரர் ரவீந்தர் ஜடேஜா சேர்க்கப்பட்டுள்ளார். அணி விபரம் வருமாறு;

தோனி (அணித்தலைவர்),சேவாக்,காம்பீர்,டெண்டுல்கர்,யுவராஜ் சிங்,ரோகித் சர்மா, யூசுப்பதான்,சகீர்கான்,இஷாந் சர்மா,ஓஜா, முனாப்பட்டேல்,இர்பான்பதான்,சுரேஷ் ரெய்னா,ரவீந்திர ஜடேஜா,பிரவீன்குமார்.

## பேராசிரியர் கமில் சுவெலெபில் பிரான்சில் காலமானார்

தமிழ் மொழி தொடர்பான பல ஆய்வுகளை மேற்கொண்டுவந்த தமிழ் அறிஞர் பேராசிரியர் கமில் சுவெலெபில் நேற்று முன்தினம் பிரான்சில் காலமானார்.

இவர் தமிழ்மொழி தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுவந்ததோடு தமிழ் மொழிக்கும் யப்பானிய மொழிக்குமிடையிலான தொடர்புகள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு தவிர்ந்த ஏனைய மாநாடுகளில் பங்குபற்றிய இவர் கொலன்ட் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல் கலைக்கழகங்களில் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இவரிற்கு நன்றாக தமிழ் தெரியும் என்பதால் கமில் சுவெலெபில் என்பதை மாற்றி தமிழ் சுவெலெபில் என தமிழறிஞர்களால் செல்லமாக அழைக்கப்பட்ட இவரின் மறைவு தமிழ் உலகிற்கு பேரிழப்பாகும் என பேராசிரியர் அ.சண்முகதாஸ் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

(ந-14)

## அமெ.பிராந்திய...

லெப்.கொமாண்டர் லோ றன்ஸ் ஏ சிமித் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது பிள்ளையானின் பிரதம ஆலோசகர் கே.விக்னேஸ்வரன் மற்றும் பேச்சாளர் அசாத் மௌலானா ஆகியோரும் உடன் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

(ந-5)

## முல்லைத்தீவில் வான் தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது நேற்றைய தினமும் வான் தாக்குதல்கள் நடத்தியதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

இரணைமடுக் குளத்திற்கு 8 கிலோமீற்றர் கிழக்காக அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் நிலையமொன்றை இலக்கு வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டதெனவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையம் குறிப்பிட்டுள்ளது.

எம்.ஐ. 24 ரக ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி இத் தாக்குதல் பிற்பகல் 1.55 மணியளவில் நடத்தப்பட்டதாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ந-14)

## விசுவமடுவில்...

வரப்பட்டிருப்பதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மூங்கிலாறு பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சுச் சம்பவத்தில் காயமடைந்த 7 பேர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த இன்னும் சிலர் மூங்கிலாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் பி.பி.சி. தமிழோசை தெரிவித்தது.

இதேவேளை இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார இது புலிகளின் பிர சாரம் என பி.பி.சியின் செய்தியினை மறுத்துள்ளார். (ந-5)

## மூதூரில் துப்பாக்கிச் சூடு மூன்று பேர் பலி

(திருகோணமலை)

மூதூர் மல்லிகைத்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் சிவில் பாதுகாப்பு படை உறுப்பினர் ஒருவரும் அடங்குவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை இச் சம்பவத்தில் காயமடைந்த மற்றுமொருவர் திருகோணமலை வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

(ந-14)

## நாளொன்று...

நகர்த்தி வருகின்றது.

அதேசமயம் கடந்த வாரங்களில் படையினர் தமது ஆயுத வளங்களையும் அதிகப் படுத்தியுள்ளனர்.

இலங்கையின் வரலாற்றில் இதுவே படையினர் குறுகிய பரப்பளவில் அதிக அளவில் செறிவாக்கப்படும் நடவடிக்கையாகும்.

படையினர் பெரும் படை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அதே சமயம் சிறிய தாக்குதல்களையும் சிறப்புப் படையணிகள் மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.

நாளொன்றிற்கு 10 தொடக்கம் 15 விடுதலைப் புலிகளையாவது கொல்வதென்பது தான் இந்தப் படையணிகள் ஒவ்வொன்றினதும் கட்டளை அதிகாரிகளின் திட்டமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

## புதுக்குடியி...

இராணுவத்தினரால் மீட்கப்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து 12 இலகு ரக ஆயுதங்களும் மீட்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கும் பாதுகாப்பு அமைச்சு, இந்த மோதல்களில் விடுதலைப் புலிகளின் 7 சடலங்களை மீட்டிருப்பதாகவும் கூறியுள்ளது.

இதேவேளை இராணுவத்தினரின் 14-வது கஜபா ரெஜிமென்ட் படையணி மருதப்பா வெளிப்பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாம்களை மீட்டிருப்பதாகவும் இந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளின் 6 பதுங்கு குழிகள் மற்றும் இரண்டு கட்டடங்கள், தற்காலிக முகாம்கள் போன்றன மீட்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-5)

## ஒரு மாத...

அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்த அவர், மாங்குளம் பகுதிக்கான மின்சார விநியோகம் அடுத்த வாரம் வழங்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதுடன் விடுவிக்கப்பட்ட கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்கும் இடையிலான போக்குவரத்து சேவைகள் சில ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதற்கட்டமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்காக வவுனியாவில் காத்திருந்த மக்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர் பேருந்துகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(ந-5)

## செய்தியாளர்களிடம்...

அவரது அரசியல் ஆலோசகர், இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர், உயரதிகாரிகள், அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

பின்பு சிவ்சங்கர் மேனன் கொழும்பில் இருந்து சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானம் மூலம் நேற்றுக் காலை 8.55 மணிக்கு சென்னை சென்றார்.

இவரது வருகையை அறிந்து பேட்டி எடுப்பதற்காக செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், தொலைக்காட்சி குழுவினர் சென்னை சர்வதேச விமான நிலைய பயணிகள் வருகை பகுதியில் தயார் நிலையில் காத்திருந்தனர்.

அவர் நேற்றுக் காலை 10.10 மணிக்கு இந்தியன் எயர்லைன்ஸ் விமானத்தில் டெல்லி செல்ல திட்டமிடப்பட்டிருந்தது. எனவே இவரை பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து உள்நாட்டு விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்வதற்கான கார் மற்றும் 8 பாதுகாப்பு வாகனங்கள் தயார் நிலையில் இருந்தன.

செய்தியாளர்களை சந்திப்பதை தவிர்க்க விரும்பிய சிவ்சங்கர் மேனன், டெல்லி செல்லும் இந்தியன் எயர்லைன்ஸ் விமானத்துக்கு உள் வழியாக செல்ல ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினார்.'

உடனே டெல்லியில் உள்ள விமான நிலைய ஆணையத்தில் அதற்கான சிறப்பு அனுமதியை அதிகாரிகள் பெற்றனர்.

இதைத் தொடர்ந்து அவர் உள் வழியாக வே காரில் சென்னை உள்நாட்டு விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து காலை 10.10 மணிக்கு டெல்லி புறப்பட்டு சென்றார்.

எனவே இவரது வருகையை அறிந்து பேட்டி எடுப்பதற்காக வெகு நேரமாக காத்திருந்த செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் தொலைக்காட்சி குழுவினர் ஆகியோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

(ந-5)


## மரண அறிவித்தல்

## முருகர் சின்னத்துரை



வண். வட-கிழக்கு கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் சின்னத்துரை அவர்கள் 18.01.2009 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.00 மணியளவில் சிவபதப்பேறு அடைந்தார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகர் சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பொடி நாகம்மா தம்பதியினரின் மருமகனும் கந்தசாமி (Colombo), பாக்கியம், காலஞ் சென்றவர்களான இரத்தினம், செல்லையா, அப்புத்துரை, பொன்னரியம், கண்மணி, இராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கந்தையா, சின்னம்மா, இராசம்மா, செல்லையா, சரஸ்வதி, பாலசிங்கம் (Switxerland) மற்றும் காலஞ்சென்றவர்களான முத்தர், கணபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞானேஸ்வரி (Germany), ஜெயமலர் (India), தவமலர் (France), நேசமலர் (Canada), றோஸ்மலர் (France), யோகசீலன் (Jaffna), யோகேஸ்வரி (Canada), கருணாதேவி (India) ஆகியோரின் அன்புத்தந்தையும், கந்தசாமி (Germany), வரதராசா (Canada), பற்பநாதன் (France), செந்தில்நாதன் (France), ரகுலராஜா (Canada), உதயகுமார் (Canada), குமாரகுலசிங்கம் (India) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுதர்சன் (London), நிருஷா (Germany), கௌரி (Canada), தேவகி (Canada), வதனி (Holand), பவானி (Colombo), தாரணியன் (Canada), ஸ்திவானியா (France), கலியுகன் (France), துர்க்கா (France), ஜனனி (France), திவ்வியா (Canada), ஆகாஷ் (Canada), அபிலாஸ் (Canada), கோகிலேஸ் (India) ஆகியோரின் அன்புப் பேரனாரும், சாயிராம், சாகித்யா, காவியன், ஆத்தியா (Canada), விதுசாயி, சானுகா (Holand) ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (19.01.2009) இன்று திங்கட்கிழமை காலை 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 11.00 மணியளவில் கோம்பையன் மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இடம்:
43/10, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன்: யோகசீலன்
மகள்: ஜெயமலர்
பெறாமகன்: V.K.தனபால

(2123)


## புலிகள் முழுமையாகத்...

சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனனின் இலங்கை விஜயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் எம்.பியுமான விஜித்த ஹேரத் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 13 ஆவது திருத்தத்தை முன்னெடுத்து அதிகார பரவலாக்கத்தை முழுமையாக முன்னெடுக்கும் அரசியல் தீர்வை உடனடியாக அமுல் படுத்த வேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காகவே சிவ்சங்கர் மேனன் இங்கு வந்தார். இதுவே உண்மையாகும்.

எனவே அரசாங்கம் உண்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டும். இலங்கைப் பிரச்சினைக்கு எவ்வாறான அரசியல் தீர்வை காணவேண்டும் என நாமே தீர்மானிக்க வேண்டும். அதைவிடுத்து இந்தியாவுக்கு தீர்வை முன்வைக்கும் அதிகாரம் கிடையாது.

அதேவேளை இந்தியாவின் யோசனைகளை ஏற்று அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்ளும் அதிகாரமும் அரசாங்கத்திற்குக் கிடையாது.

அதிகாரப்பரவலாக்கத்திற்காக மக்கள் ஆணை வழங்கவில்லை. பயங்கரவாதத்தை ஒழித்து மக்களுக்கு சம உரிமைகளை வழங்கவே ஆணை வழங்கினர். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இந்தியா ஆதரவு வழங்கும் என உறுதியளித்தால் அதே நேரத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் தமிழர் கூட்டமைப்பினரை டில்லிக்கு வர வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளது.

இது இந்தியாவின் இரட்டை வேடத்தை வெளிப்படுத்தியுள்ளது.

புலிகள் முழுமையாகத் தோல்வியடைவதையும் எமது நாடு பயங்கரவாதத்தை முழுமையாக வெற்றிபெறுவதையும் இந்தியா ஒருபோதும் விரும்பாது இலங்கையில் பிரச்சினை தொடர்வதன் மூலமே இந்தியாவின் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும். எமது பிரச்சினையைப் பயன்படுத்தி இங்கு இந்திய வர்த்தகத்தை வியாபிக்கச்செய்து எமது பொருளாதாரத்தைக் கொள்ளையடிப்பதே இந்தியாவின் நோக்கமாகும் என்றார். (ந-5)

## உடனடியாக யுத்தத்தை...

சிவ்சங்கர் மேனனின் இலங்கை விஜயம் குறித்து இந்திய வெளியுறவுத்துறை நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுக்காலை சிவ்சங்கர் மேனன்இந்தியா சென்ற கையோடு இவ்வறிக்கை வெளியாகியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைதிப் பேச்சு மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும் என்றும் உடனடியாக அமைதிப்பேச்சுவார்த்தை நடத்தி போரை நிறுத்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சிவ்சங்கர்மேனன் கோரிக்கை விடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் போர் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் விதமாக நிவாரணப் பொருட்களை வழங்க இந்திய அரசு தயார் என்றும் அவர் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கான இந்தியத் தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில், கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சனிக்கிழமை காலை சந்தித்த, சிவ்சங்கர் மேனன் இருதரப்பு உறவுகள் மேம்பாடு, இலங்கையில் தற்போதுள்ள அரசியல், பொருளாதார நிலைகள் மற்றும் பிராந்திய உறவுகள் குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தியிருப்பதாகவும் இதன்போது இலங்கை ஜனாதிபதி தற்போது பெறப்பட்டுவரும் இராணுவ தொடர் வெற்றிகளில் இருந்து இலங்கை பிரச்சினை தொடர்பில் அரசியல் தீர்வொன்றினை நோக்கி விரைந்து செல்லும் தனது விருப்பத்தினை வெளிப்படுத்தியிருந்ததாகவும் இந்தியத் தூதரகம் தெரிவித்திருக்கிறது.

அத்துடன் வழமைபோல இந்தியா, இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒருமித்த இலங்கைக்குள் தமிழர் உட்பட சகல சமூகங்களும் சமாதானமாகவும் கௌரவத்துடனும் வாழ்வதனை உறுதி செய்யக் கூடியஅரசியல் புரிந்துணர்வு ஏற்படுவதன் அவசியத்தினை வலியுறுத்தியதாகவும் இந்தப் பின்னணியில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கக் கூடியஅரசியலமைப்பின் 13-வது சரத்தினை முழுமையாக அமுல் படுத்த இலங்கைக்கு இருக்கக் கூடிய அர்ப்பணிப்பினை வரவேற்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன், இலங்கை அதிகாரிகளுடனான தனது சந்திப்பின்போது இலங்கையில் வடக்கில் நிலவும் மனிதாபிமான நிலைமைகள் குறித்து தனது கரிசினையினை வெளிப்படுத்தியதாகவும் மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்துள்ள மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தியதாகவும் இலங்கைக்கான இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ந-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.